இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 11 | திகதி : 08.08.2021 | விலை : 30.00

# இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் காலத்தின் தேவைக்கு வேண்டிய அவசர வேண்டுகோள்

இன்றைய காலத்தின் அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையாவது:

நமது நேசத்துக்குரிய தாய் நாடாகிய இலங்கையில் இன்று கொவிட் - 19 பெருந்தொற்று நாடு முழுவதும் பரவி பல ஆயிரக்கணக்கான உயிர்களைக்காவு கொண்டும், மனித வாழ்வில் பல நிலைகளில் பாதிப்புக் களையும் ஏற்படுத்தி நாட்டையே வெகுவாகப் பாதித்துள்ளது. சமூக, அரசியல், மத மற்றும் இன வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அரசாங்கமும் பொதுமக்களும் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்து மக்களின் நலனுக்காக ஒத்துழைப்புடன் செயற்படா விட்டால் சில நீடித்த தீங்கு விளைவிக்கும் விளைவுகள் ஏற்படலாம். அரசாங்கம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் தடுப்பூசித் திட்டத்திற்காகப் பாராட்டும் வேளையில், சமூகத்தின் ஏழ்மைச் சூழலில் தொற்று நோயால் ஏற்படும் மோசமான விளைவுகளைத் தடுக்க இன்னும் தீவிரமான நடவடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்யவேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம். பிள்ளைகள் மற்றும் இளையவர்களைப் பெருந்தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்குடனேயே பாடசாலைகளும் பிற கற்றல் நிறுவனங்களும் மூடப்பட்டன. இந்நேரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் நிலைமை எங்களுக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.பாடசாலைகளை கூடிய விரைவில் திறக்குமாறு அரசாங்கத்தை அழைக்கின்றோம். ☛ 11

## தியோகு நகர் கிராமத்து மக்களுக்குக் காணி வழங்கல்



முல்லைத்தீவு மாவட்டம், சிலாவத்தைப் பகுதியில் உள்ள சுவாமி தோட்டக்காணியில் குடியிருக்கும் மக்களுக்குக் காணி வழங்கும் நிகழ்வு 29.07.2021 வியாழக்கிழமை அன்று நடைபெற்றது.

இப்பகுதியில் ஏறத்தாழ 95 குடும்பங்கள், முதியோர் சங்கம், முன்பள்ளி, சைவ ஆலயம், பொது நோக்கு மண்டபம் என்பன அடங்கிய தியோகு நகர் எனும் கிராமம் அமைந்துள்ளது.

இக் கிராமத்தில் உள்ள மக்களுக்கும், அமைப்புகளுக்கும் சைவ ஆலயத்திற்குமாக யாழ் கத்தோலிக்க திருஅவைக்குரிய காணியை யாழ்ப்பாணம் கத்தோலிக்க ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பகிர்ந்தளித்துள்ளார். ☛ 11

## நவாலியூரில் குருக்களுக்கான பங்குப் பணிமனை யாழ். ஆயரால் திறந்துவைப்பு



நவாலியூர் பங்கில் குருக்களுக்கான பங்குப் பணிமனையானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 05.08.2021 மாலை 5.00 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

உள்நாட்டு வெளிநாட்டுப் பங்கு மக்களின் நிதியுதவியில் பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாகரன் அடிகளாரின் மேற்பார்வையில் மிக அழகுற இப் புதிய பங்குப்பணிமனையானது அமைக்கப்பட்டுள்ளது.

## குருத்துவ வாழ்வில் 30 ஆண்டுகளை நினைவுகூரும் செடெக் நிலையத்தின் தேசிய இயக்குநர்



கரித்தாஸ் இலங்கை - செடெக் தேசிய நிலையத்தின் தேசிய இயக்குநர் அருட்தந்தை மஹேந்திர குணதிலக அடிகள் தமது குருத்துவ வாழ்வில் 30 ஆண்டுகளை கடந்த 25ம் திகதி நிறைவு செய்து ஆண்டவருக்கு நன்றிப்பலி செலுத்திக் கொண்டாடி மகிழ்ந்தார். அடிகளாரின் பணிகளுக்காக யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் சார்பாகவும் யாழ் மறைமாவட்ட யாழ் - வன்னி கியூடெக் நிறுவன இயக்குநர்கள், ஊழியர்கள் சார்பாகவும் இறைவனுக்கு நன்றி கூறி, அடிகளாருக்கு எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

அருட்திரு. மஹேந்திர குணதிலக அடிகள் யாழ் மறைமாவட்டத்தின் மீது விசேட அக்கறையுடன் பணியாற்றுவதுடன், துன்பப்படும் மக்களின் துயர் துடைக்கும் பணிகளை செடெக் கரித்தாஸ் நிறுவனம் ஊடாக ஆற்றுகின்றார். ☛ 11

## ஆலயத் திருநாட்கள் உள்ளூர் மக்களுடன் மட்டும் குருக்கள் மன்றக் கூட்டத்தில் தீர்மானம்

தற்போதைய தொற்றுநோய் சூழல் காரணமாக ஆலயத்திருநாட்களை மட்டுப்படுத்தப்பட்ட மக்களோடு, சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்துக் கொண்டாடுமாறும், திருப்பலிகளில் ஆலய சுற்றாடலில் வாழும் உள்ளூர் மக்கள் மட்டும் கலந்துகொள்ளம் படியாகவும் இறைமக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

வெளியூர்களில் வாழ் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் திருவிழாக்களில் கலந்துகொள்வதைத் தவிர்க்கும்படியாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## திருக்குடும்ப சபையினரின் மடங்களின் வரலாறு ஆவணமாக வெளியீடு

திருக்குடும்ப சபையினரின் மடங்களின் வரலாறுகளின் தொகுப்பு “உங்கள் குழுமம் நசரேத் இல்லத்தைப் பிரதிபலிப்பதாக” என்ற தலைப்பில் ஆவணப்புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.

திருக்குடும்ப சபையின் இலங்கையின் வடமாகாண அலகின் அலகின் 78 மடங்களின் வரலாறுகள் இதில் அடங்கியுள்ளன. திருக்குடும்ப சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி தியோபேன் குரூஸ் அவர்களின் முயற்சியில் பல அருட்சகோதரிகளின் பங்களிப்போடு வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இச்சபையின் 200 ஆண்டு காலப்பணியைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## கொவிட் தொற்றைத் தடுக்க பொறுப்புடன் செயற்படுவோம்

இலங்கை ஆயர்கள் பேரவை காலத்தின் தேவையை முன்னிட்டு ஓர் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது. நாம் அதை உடன் கருத்தில் எடுத்து செயற்பட வேண்டிய அவசர சூழலில் உள்ளோம்.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் உள்ளிட்ட இலங்கைத் தீவில் கொவிட் 19 நோய்த் தொற்றினாலும் கொவிட் திரிபடைவதாலும் நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் 168 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துச் செல்லுமென சுகாதார சேவைகள் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத்தீவில் அனைத்து அரச மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான படுக்கை வசதிகளுக்கும் ஒக்சிஜனுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுவரை நான்காயிரத்து 821 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை தொற்று அதிகரித்து வருவதால் இலங்கைத்தீவு முழுவதையும் மீண்டும் முடக்குமாறு கோரிக்கைகள் விடப்பட்டுள்ளதாக அமைச்சர் பவித்திர வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றிலிருந்து மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார். இதே வேளை, இராணுவத் தளபதி தலைமையிலான கொவிட் தடுப்புச் செயலணியைக் கலைத்துவிட்டு அமைச்சரவை மூலமான புதிய செயலணி ஒன்றை உருவாக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொவிட் -19 நோய் தொற்று இலங்கையில் வேகமாகப் பரவி வருவது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதனால் தேவை ஏற்படின் முழு நாடும் மீண்டும் முழுமையாக முடக்கப்படும் என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபிள்ளை தெரிவித்துள்ளார்.

அதிக கொவிட் தொற்றாளர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும் நிலையில் தென்னிலங்கையில் உள்ள காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையும் இரத்தின புரி மாவட்ட பொது வைத்தியசாலையும் அவசர நிலையைப் (Red Alert) பிரகடனப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த வைத்தியசாலைகளின் நிர்வாகம் அதன் அனைத்து ஊழியர்களுக்கும் அவசர நிலை தொடர்பாக எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்கி அவர்களைத் தயார் நிலையில் இருக்குமாறும் பணித்துள்ளது.

தமிழர் தாயகமான வட மாகாணத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொவிட் மரணங்கள் அதிகரித்து வருவதாக வட மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட மாகாணத்தில் தினமும் கொவிட் தொற்றுடன் பலர் அடையாளம் காணப்படும் நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள இரண்டு கொவிட் சிகிச்சைப் பிரிவுகள் நோயாளர்களால் நிரம்பிக் காணப்படுவதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் செயற்படும் கொவிட் தொற்றாளர்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் கொவிட் நோயாளர்களுக்கான இடைநிலை மையம் ஆகியவற்றிலும் அதிக நோயாளிகள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதாக பதில் பணிப்பாளர் கூறினார்.

அத்துடன் கோப்பாயில் உள்ள கொவிட் தொற்றாளர்களுக்கான இடைச் சிகிச்சை நிலையத்தில் சுமார் 420 கொரோனா நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் கூறுகிறார்.

ஆகவே இதுவரை நாளும் எந்தவொரு தடுப்பூசிகளையும் பெற்றிராத மக்கள் விரைவாகச் சென்று தடுப்பூசிகளைச் செலுத்த வேண்டும். முதலாவது தடுப்பூசி செலுத்தியவர்கள் இரண்டாவது தடுப்பூசியையும் செலுத்த வேண்டும். மக்கள் தங்கள் பாதுகாப்பில் தாங்களே கவனமாக இருக்க வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

ஆலயக் கொண்டாட்டங்கள் அவசியமற்ற பிரயாணங்கள், ஒன்றுகூடல்களை எதிர்வரும் நாட்களில் சமூக நலன் கருதித் தவிர்த்துக் கொள்வோம்.

அரசாங்கம் உரிய நடவடிக்கைகளைச் செய்துவரும் அதே நேரம் பொதுமக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலகட்டமிது என்பதை உணர வேண்டும்.

# குளமங்கால் பங்கில் தாத்தாக்கள், பாட்டிகள் தினம்



குளமங்கால்பங்கில்வசிக்கும்119தாத்தாக்கள், பாட்டிகள் உலக தாத்தாக்கள் பாட்டிகள் தினத்தில் மிக விமரிசையாகக் கௌரவிக்கப்பட்டனர். அன்றைய தினம் சிறப்புத் திருப்பலி தாத்தாக்கள், பாட்டிகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும், சிறப்பாக அவர்களின் பேரப்பிள்ளைகளினால் அவர்களுக்குப் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

அன்று 119 தாத்தாக்கள், பாட்டிகள் இணைந்து பங்கில் "புனித பிரான்சிஸ்கு சவேரியார் கல்வி நிறுவ-னம்" ஒன்றையும் திறந்து வைத்தனர். இக்கால இளைய தலைமுறையினர் ஞானத்திலும், அறிவிலும் முன்னேற வேண்டும் என்பதே அவர்களின் விருப்பாக அமைந்தது.

இந் நிகழ்வுகள் அனைத்தையும் பங்குத்தந்தை அருட்பணி S.J.C.பாஸ்கரன் அடிகள் அழகுற ஒழுங்கு செய்திருந்தார்.

## நற்செய்தி அறிவித்தல் என்பது மதமாற்றத்தைக் குறிப்பதல்ல!

'பயணிக்கும் திருஅவை' என்ற தலைப்பில், ஆகஸ்ட் மாதத்திற்குரிய செபக் கருத்தை ஒரு காணொளிப் பதிவாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.திருஅவைக்குரிய குறிப்பிட்ட பணி நற்செய்தி அறிவித்தல் ஆகும் எனக் கூறும் திருத்தந்தை, திருஅவையின் அழைப்பும், அதன் தனி அடையாளமும் நற்செய்தி அறிவித்தல் என்பது மதமாற்றத்தைக் குறிப்பவை அல்ல என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

நம் வாழ்வில் இறைவனின் விருப்பத்தை, திட்டத்தை நாம் பகுத்தறிந்து, அதன் வழி தூய ஆவியாரின் வழிகாட்டுதலுடன், நம் வாழ்வை வடிவமைத்துக் கொள்வதன் வழியாகவே, திருஅவையைப் புதுப்பிக்கமுடியும் எனவும், எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒரு தனிமனிதனாக நாம் ஒவ்வொருவரும் நம்மை மாற்றியமைப்பதே திருஅவையின் புதுப்பித்தல், அல்லது உருமாற்றம் ஆகும் என உரைக்கும் திருத்தந்தை, இறைவனின் கொடையாக வரும் தூய ஆவியாரை, நம் இதயத்தில் அனுமதித்து, இயேசு நமக்கு கற்பித்தவைகளை செயற்படுத்துவதற்குரிய உதவியை அவரிடம் நாடுவதே நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

# அன்பிய ஆணைக்குழுவினர் சந்திப்பு

யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் கூட்டம் கடந்த 02.08.2021 அன்று அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A.மில்வர்வாஸ் CMF அடிகளார் தலைமையில் நடைபெற்றது. மறைக்கோட்ட இயக்குநர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அன்பிய யூபிலி ஆண்டின் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வும் சமகால கொரோனாத் தொற்றின் சூழமைவில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

# அருட்பணியாளர்களுக்காக சிறப்பாக செபியுங்கள் - திருத்தந்தை

கடந்த 04.08.2021 அன்று புனித யோவான்மரியவியான்னிஅவர்களின்திருநாளை யொட்டி, பங்கு அருட்பணியாளருக்காகவும், இன்னும் உலகின் அனைத்து அருட்பணியாளர்களுக்காகவும் சிறப்பான முறையில் இறை வேண்டல் செய்யும்படி, உங்கள் ஒவ்வொருவரையும் நான் அழைக்கிறேன்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

பங்கு அருட்பணியாளருக்கும், பொதுவாக, அனைத்து அருட்பணியாளருக்கும் பாதுகாவலராகக் கருதப்படும் புனித யோவான் மரிய வியான்னி அவர்களின் திருநாள், ஆகஸ்ட் 4இல்சிறப்பிக்கப்பட்டதையொட்டி,இந்தஅழைப்பை விடுத்தார்.

'அர்ஸ் நகரின் அருட்பணியாளர்' என்றழைக்கப்படும் புனித வியான்னி அவர்களின் எடுத்துக்காட்டினால் தூண்டப்பட்டு, அருட்பணியாளர்கள் அனைவரும், மீட்பளிக்கும் நற்செய்தியை பறைசாற்றும் பணியில் ஆர்வமாய் ஈடுபட அவர்களுக்காகச் செபிப்போம் என்று, திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

1786ம் ஆண்டு, மே 8ம் திகதி பிறந்த யோவான் மரிய வியான்னி அவர்கள், தன் 29வது வயதில் அருள்பணியாளராக அருட்பொழிவு பெற்று, பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்குப் பகுதியில், 230 பேர் மட்டுமே வாழ்ந்துவந்த அர்ஸ் என்ற சிறு கிராமத்தில் பங்கு அருட்பணியாளராக நியமிக்கப்பட்டார்.

ஒவ்வொரு நாளும் 16 மணி நேரங்கள் ஒப்புரவு அருளடையாளம் வழங்குவதற்குத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்த இந்தப் புனித அருட்பணியாளரைத் தேடி, பிரான்ஸ் நாட்டின் அனைத்து ஊர்களிலிருந்தும் மக்கள் வந்த வண்ணம் இருந்ததால், அர்ஸ் கிராமம், 'ஆன்மாக்களின் பெரும் மருத்துவமனை' என்ற பெயர் பெற்றது.

1859ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி, தன் 73வது வயதில் இறையடி சேர்ந்த யோவான் மரிய வியான்னி அவர்களை, திருத்தந்தை 11ம் பயஸ் அவர்கள் புனிதராக உயர்த்தி, அவரைப் பங்கு அருட்பணியாளர்களின் பாதுகாவலர் என்றும் அறிவித்தார்.

2019ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி, புனித யோவான் வியான்னி அவர்கள் இறையடி சேர்ந்ததன் 160 ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்பட்ட வேளையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்து அருட்பணியாளருக்கும் எழுதிய ஒரு மடலில், இறைமக்களைப் பேணிக்காக்கவும், அவர்களுடன் இணைந்து பயணிக்கவும் அழைப்பு விடுத்தார்.

இன்றைய உலகில், முழுமனதுடன் பணிகள் செய்யும் அருட்பணியாளர்களின் பணிக் குருத்துவத்தின் அழகை நாம் மீண்டும் கண்டுணர, புனித யோவான் மரிய வியான்னி அவர்கள் உதவி செய்கிறார் என்று திருத்தந்தை இம்மடலில் கூறியுள்ளார்.

## திருப்பீடத்தின் நிதி நிலைமையில் பெருந்தொற்று காலத்தில் சவால்கள்

APSA எனப்படும் திருப்பீடத்தின் சொத்து மேலாண்மை அமைப்பின், 2020ம் ஆண்டு நிதி இருப்புநிலை குறித்த அறிக்கையை, அந்த அமைப்பின்தலைவர் பேராயர் Nunzio Galantino அவர்கள், ஜூலை 24, அன்று வெளியிட்டுள்ளார்.

திருப்பீடத் தலைமையகம் வழங்கிய நிதி, மற்றும், முதலீடுகளிலிருந்து கிடைத்த இலாபம் ஆகியவை குறைந்துள்ளன என்று கூறியுள்ள பேராயர் Galantino அவர்கள், இந்நிலையிலும், நிதிப்பற்றாக்குறையால் துன்புற்ற இடங்களுக்கு, APSA அமைப்பால் உதவமுடிந்தது என்று கூறினார்.

பெருந்தொற்றுக் காலத்தில் வரவு குறைவாக இருந்தாலும், இக்காலம் உருவாக்கிய நெருக்கடிகள், "ஒரு திருஅவை" போலச் செயல்படுவதற்கு ஆவலைத் தூண்டியது என்று எடுத்துரைத்தார்.

# அடையாளம்

## ஓர் உளவள ஆன்மீகப் பார்வை

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**கலப்புத் திருமணம்**

இந்தக் கட்டுரையை நான் தமிழில் நிகழ்த்துவதால் எங்கள் மாறி வரும் தமிழ்ச் சமூகத்தைப் பற்றியும் அடையாளத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.பொதுவாகப் பார்த்தால் எங்கள் தமிழ்ச் சமூகம் பாரம்பரியமாக ஒரு பிற்போக்குத் தன்மை கொண்டது. பாரம்பரியங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஒரு மூடிய அமைப்பாகவும் இருந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் இளைஞர்கள், ஆண்களும், பெண்களும் ஒன்றாகக் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், ரியூஷன் நிலையங்களுக்கும் செல்கிறார்கள். இரு சாராரும் வேலை செய்வதால் வேலைத் தளங்களில் ஆண்களும் பெண்களும் சந்திக்கும் வாய்ப்புக்கள், உரையாடும் வாய்ப்புக்கள், பழகும் வாய்ப்புக்கள், கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்புக்கள் நிறைய ஏற்படுகின்றன. ஆகவே காதல் திருமணங்கள் கூடிவருகின்றன.

மேல்நாடுகளில் பிறந்து வளரும் தமிழ் இளைஞர்கள் வேறு இனத்தவருடனும் வேறு மதத்தினருடனும், வேறு நிறத்தினருடனும், வேறு நாட்டினருடனும் பழகும், வாய்ப்புக்கள் நிறைய உண்டு. "காதலுக்குக் கண் இல்லை", "கண்டவுடன் காதல்" போன்ற நிலைப்பாடு பெரும்பான்மையும் இவர்களிடம் இல்லை. இவர்கள் படித்தவர்கள், நல்ல வேலையில் உள்ளவர்கள், ஆண் பெண் என்ற உறவில் ஒருவரை ஒருவர் அறிந்து அவருடன் பழகிய பின்னரே திருமணம் செய்கிறார்கள். தமிழ் சமூகத்தில், இது பாரிய ஒரு மாற்றம்.

இப்படித் திருமணம் செய்வோரின் பிள்ளைகள் யார்? இவர்களிடையே ஓர் அடையாளக் குழப்பம் உண்டா? உதாரணமாக உயர்சாதி என்று தம்மைத் தாமே சொல்லிக் கொள்ளும் தமிழ்ப் பெற்றோரின் பிள்ளை ஓர் ஆங்கிலேயனையோ, ஒரு கெனியனையோ, ஒரு குயுராத்திக் காரியையோ திருமணம் செய்யும் பொழுது இவர்களுடைய பிள்ளைகளின் அடையாளம் என்ன? எதிர் காலத்தில் இவர்கள் இளைஞர்களாகி வேறு வேறு கலப்புத் திருமணங்களைச் செய்யும் பொழுது கலை, கலாசாரம், இனம், மொழி, மதம், நாடு என்று இவர்கள் தங்களை அடையாளப்படுத்த முடியுமா? அன்றேல் படிப்படியாக இனம், மதம், நிறம், சாதி, நாடு என்ற ஒரு அடையாளம் இல்லாமல் போகுமா? மனிதம் என்ற ஓர் அடையாளம் மட்டுமே தங்கி நிற்குமா? காலந்தான் இதற்குப் பதில் சொல்லும்.

இப்படிப்பட்ட நிலையில் எனது கூற்று மேலும் உறுதியடைகின்றது. அதாவது, புறத்திலிருந்து வரும் அடையாளங்கள் பொய்யானவை, அன்றேல் தற்காலிகமானவை. மனிதர் தங்கள் உண்மையான அடையாளத்தைத் (real identity or identity true) தேடல் அவசியம். இத் தேடலில் தான் ஆன்மீகம் உண்.டு இந்தத் தேடலையே ஒரு திருப்பயணம் என்று உருவகமாகக் கூறுகின்றோம்.

**உண்மையான அடையாளம் என்ன?**

புறத்தில் இருந்து நான் என்னுடன் இணைத்துக் கொண்ட புற அடையாளங்களை ஒவ்வொன்றாகக் களைந்து, என்னுள் சென்று ஓர் அகப் பயணத்தில் எனது உண்மையான அடையாளத்தை அனுபவிக்கலாம், அனுபவிக்க வேண்டும். எம்மில் பலர் கூறுவதுண்டு "நாம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டோம்." இந்த சாயல் என்ன? அன்பு



இந்த அன்பு ஒரு பெயர்ச் சொல் அல்ல! தேக்கமுடையதல்ல. மாறாக, இது ஒரு வினைச்சொல். அதாவது ஓர் உந்து சக்தி கொண்டது. ஆற்றல் உடையது. இந்த அன்பு விரியும், அகலும் அனைத்தையும் உள்வாங்கும்.என்னுள் ஒரு தெய்வீகம் உண்டு. அதேவேளை ஒரு மிருகமும் உண்டு எழுபதுகளில் சார்ஸ் மணி ஒரு பாட்டியற்றிப் பாடினார். "மனிதம் தெய்வமாகலாம், மனிதம் மிருகமாகலாம்" இந்த இரு குணங்களையும் நாம் மனிதரில் காண்கின்றோம். ஓர் இனத்தோடு ஒரு மொழியோடு, ஒரு மதத்தோடு, ஒரு நிறத்தோடு, ஒரு நாட்டோடு ஒருவர் ஒருவர் தன்னை அடையாளப்படுத்தி அந்த மொழிக்காக, இனத்திற்காக, மதத்திற்காக, நிறத்துக்காக, நாட்டிற்காக மற்றவர்களை கொன்று குவித்தது வரலாற்றுப் பதிவுகள் மட்டுமல்ல, இன்றும் உலகெங்கும் நடைபெற்று வரும் கொடிய செயல், மனிதரில் உள்ள மிருகத்தனம்.

அதேவேளை, ஒரு மனிதன், மனுசி தனது அடையாளத்தோடு வளர்ந்து, முதிர்ச்சி பெற்று, தனது தேடலில் ஆன்மீகத்தை நோக்கிப் பயணிக்கும் பொழுது, அவன் - அவள் தனது மொழியை, இனத்தை, மதத்தை, நாட்டை மேவி வாழும் பொழுது அவள் அவன் தனது குறுகிய அடையாளத்தை மேவி வாழ்கின்றான் / வாழ்கின்றாள். இந்த "மேவிய" நிலையிலே அவனோ /அவளோ ஓர் உலகளாவிய ஆன்மீகத்தை வாழ முடியும் அவன் / அவள் கடவுளில் தனது உண்மையான அடையாளத்தை அனுபவிக்கிறான், அனுபவிக்கிறாள். இந்த அடையாளம் புறத்தே இருந்து வருவதல்ல, அகத்தே இருந்து முகிழ்வது.

**பரிமாணக் கண்ணோட்டம்**

பரிணாமம் இன்று ஒரு கருத்தல்ல, ஒரு கொள்கையல்ல, ஒரு தத்துவமல்ல, பரிணாமம் இன்று ஒரு யதார்த்தம். இந்தப் பரிணாம வழி நின்று பார்க்கும் பொழுது, ஒரு கட்டத்தில் வளர்ந்து விட்ட ஒரு மிருகம் விழிப்புணர்வு பெறுகின்றது. இதையே மனிதம் என்கிறோம். இந்தப் பிரபஞ்சம் ஒரு சக்தியால் இயங்குகிறது. இந்த சக்தியை எம்முன்னோர் "பிராணா" என்று குறிப்பிட்டுள்ளார்கள். மனிதனிலுள்ள பிரபஞ்சத்து சக்தியின் ஒரு பகுதி. இந்த பிரபஞ்சத்தின் அனைத்தும் ஒன்றோடொன்று உறவுடையது. இது புதிய விஞ்ஞானத்தின் கூற்று. இந்த உறவுக்கு மூல காரணமாக இருப்பது அன்பு சக்தி. இந்த அன்பில் தான் எனது உண்மையான அடையாளம் உண்டு. அதை அனுபவிக்கும் வரை எனது திருப்பயணம் தொடரவேண்டும். இப்படிப்பட்ட ஓர் அடையாளத்தை மக்கள் அனுபவிக்கும் பொழுது தான் மனித இனம் ஓர் இனம் என்ற உணர்வும், நிறுவனமயமாக்கப்பட்ட அன்றேல் ஒரு மனித அமைப்புக்கும் சிக்கிவிட்ட மதத்தை மேவிய ஓர் ஆன்மீகத்தை மனித இனம் அனுபவிக்கலாம். முன்னேறிச் செல்லும் வழி இதுவே.

*கரைவையூர்ச் செல்வம்*

---

# இறைவனில் நிறை உறவு

உயிர் கொடுப்பவர் இறைவன் உயிர்கொடுத்து, மனுக்குலத்தை உய்விப்பவருர் இறைவன் ஒருவரே என்பது பொதுவாக இஸ்ரயேல் மக்களால், இஸ்லாமியர்களால், கிறிஸ்தவர்களால், சைவ சமயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் கொள்கையாகும். ஒரு கடவுள் கோட்பாடு மேற்படி சமயத்தினரின் வாழ்க்கை முறைகளிலும் வழிபாட்டு முறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இறைவன் இஸ்ராயேலரின் குல முதுவராகிய ஆபிரகாமோடு தொடர்பு கொண்டு அவரை ஆசீர்வதிக்கின்றார். "உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசீர் பெறும்." (தொ நூல் 12:3) என்ற அருள் வார்த்தையை ஆபிரகாமிற்குச் சொல்லி இறைவன் இஸ்ராயேலரின் வரலாற்றில் தம்மை வெளிப்படுத்தினார்.

அதே கடவுள் ஈசாவுக்குத் தோன்றி "உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நாமே! அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசீர்வழங்கி என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்." (தொநூல் 26:24) என்றார்.

"உன் மூதாதையராகிய ஆபிரகாமின், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே" என்று யாக்கோப் பிற்குத் தன்னை அறிமுகம் செய்யும் கடவுள், "உன் வழி மரபோ, நிலத்தின் மண்ணுக்கு ஒப்பாகும்" (தொ.நூல் 28:13-14) என்று ஆசீர்வதிக்கின்றார். "உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நாமே!" (வி.ப3:6)"இருக்கின்றவராக இருக்கின்றவர் நாமே!" (வி.ப3:14) என்று தம்மை அறிமுகம் செய்கின்றார்.

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க இறைவன் கருவியாக மோசேயைத் தேர்ந்தெடுத்தார். "நான் திக்குவாயன்" என்று கூறிப் பின்வாங்க முயற்சித்தாலும் இறைவன் அவரை விட்டுவிடவில்லை. எகிப்தில் பத்துப்பெரும் துன்பங்களைப் பெருகச்செய்து, இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கான சூழலை இறைவன் உருவாக்கினார். மோசே இஸ்ராயேலருக்கு இறைவனின் திட்டத்தை விளக்கினார். பாஸ்கா ஆட்டினை அடித்து, அந்த இரத்தத்தைக் கதவு நிலைகளில் பூசுமாறு சொன்னார். தலைமுறை தலைமுறையாக இதை விளக்குமாறு அவர்களுக்குப் பணித்தார்.



"இது ஆண்டவரின் பாஸ்காப்பலி, அவர் எகிப்தியரை சாகடித்தபொழுது எகிப்திலுள்ள இஸ்ராயேல் மக்களின் வீடுகளைக்கடந்து சென்றார். இவ்வாறு தம் வீடுகளிற்கு மீட்பளித்தார்" (வி.ப 12:27) என்று மோசே மக்களுக்கு எடுத்துரைத்தார். விடுதலைப்பயணத்தின் போது இஸ்ராயேலர் பல துன்பங்களுக்கு ஆளாகினார்கள். எதிர்பாராத தடைகள் ஏற்பட்டதும், வல்லமையுள்ள இறைவனின் நம்பிக்கையில் தளர்வுற்றவர்களாகிக் காணப்பட்டார்கள்.

> **இறைவனைத் தேடுபவர்கள் நிச்சயமாக அவரைக் கண்டுபிடித்தே தீருவார்கள். அவர் நம் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலேயே வாழுவதை, எமது சகோதர, சகோதரிகளில் அவர் செயற்படுவதைக் கண்டுணர்வது சாத்தியமே.**

"எகிப்தில் சவக்குழி இல்லையென்றா நீர் எங்களைப் பாலைவனத்திற்குச் சாவதற்கு இழுத்து வந்தீர்? பாலைநிலத்தில் சாவதைவிட எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்" (வி.ப 14:11-12) என்று இஸ்ராயேலர் மோசேக்கு எதிராக முணுமுணுத்தார்கள். எனினும் மோசே இறைவனில் நம்பிக்கை கொள்ளுமாறு அவர்களை உற்சாகப் படுத்தினார். "அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள், இன்று ஆண்டவர் தாமே உங்களுக்கு ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார். நீங்கள் அமைதியாக இருங்கள்" (வி.ப.14:13-14) என்று இறைவன் கூறியவாறு கையைக் கடல்மேல் நீட்டவே கடல் திரல் பிரிக்கப் பட்டது. வலப்பக்கத்திலும் இடப் பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக அமைய இஸ்ராயேலர் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். அவர்களைத் துரத்திய எகிப்தியர் நடுக்கடல் வரை வந்தனர். அப்பொழுது ஆண்டவர் எகிப்திய அணிவகுப்புக் களை நிலைகுலையச் செய்தார். ஆண்டவர் சொற்படி மோசே மீளவும் கடல் மேல் கையை நீட்டவே கடல் பழைய நிலைக்குத் திரும்பியது. பார்வோனின் படைகள் அனைத்தும் ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அப்பொழுது மோசேயும் இஸ்ராயேலரும் ஆண்ட வரைப் புகழ்ந்து பாடியது:

"ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன். ஏனெனில், மாட்சியுடன் வெற்றி பெற்றார்."ஆண்டவர் என்பது அவர் பெயராம். பார்வோனின் தேர்களையும் படைகளையும் அவர் கடலில் தள்ளிவிட்டார். ஆண்டவரே தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் யார்? தூய்மையில் மேலோங்கியவர் புகழ்ச்சிக்கு உரியவர். அரும் செயற் ஆற்றுதற்கு உரியவர்.

*அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)*

> **"இஸ்ராயேலே செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே. உன் முழு ஆற்றலோடு, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" (இ.ச. 6:4)**

# காவலன் கலசம்

அர்த்தமுள்ள ஆன்மீகம் 02

# கொவிட் முடக்கமும் இல்ல வழிபாடும்

இந்தக் கொடிய கொவிட்டிலிருந்து இறைவன் நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று எல்லா மதத் தலைவர்களும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிசும் கேட்டுக்கொண்டே இருக்கிறார். ஆனால் கொவிட் நிலையோ குறைவுபடுவதாயில்லை. இந்நிலையில்:

**இறைவன் இருக்கின்றாரா?**
**அவருக்கு நம்மட்டில் அக்கறை உண்டா?**
**நமது செபங்களால் பயன் ஏதும் உண்டா?**

போன்ற கேள்விகள் நமது மனங்களைக் குடைந்து கொண்டே இருக்கின்றன, நம்மை வாட்டி வதைக்கின்றன. ஆனால், இப்படிப்பட்ட கேள்விகளுக்கு முகங்கொடுக்க நம்மில் எத்தனைபேர் தயார்? ஏனென்றால், சவால்களுக்குள்ளே எதிர் நீச்சல் போடுவதுதான் வெற்றிக்கான படிகள்.

பல விதங்களில் இந்தக் கொடிய நோய் நம் அனைவருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாய் அமைந்துள்ளது. அனைத் திற்கும் மேலாக வாடிக்கையாய்ச் செய்து வந்த பலவற்றை நாம் திறனாய்வு செய்து வாழ இது ஓர் அரிய சந்தர்ப்பம். குறிப்பாக கடவுள் என்பவர் எனக்கு யார்? செபம் என்றால் என்ன? சமயம் என்றால் என்ன? கிறிஸ்தவன் என்றால் யார்? போன்ற கேள்விகளை இதய சுத்தியோடு கேட்கத் தூண்டுகின்றது.

இந்தக் கொடிய நோய் நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். ஏனென்றால் நமது வாழ்க்கை முறைகளை மீளாய்வு செய்து பார்க்க இது ஓர் அரிய காலம். உதாரணமாக: இப்பொழுது நமது திருமணக் கொண்டாட்டங்களை எளிமையாக்கியுள்ளோம். தேவையற்ற செலவுகளுக்கான பணத்தை ஏழைகளுக்கு உதவப் பயன்படுத்துகின்றோம் என நம்புகின்றோம். தேவையற்ற நிகழ்வுகளை நிறுத்தியுள்ளோம். அவற்றிற்கு செலவிட்ட நேரங்களை ஆக்கபூர்மான விதங்களில் செலவிடுகிறோம் என நம்புகின்றோம். இப்பொழுது எமது போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வாகனப் புகையால் சூழல் மாசடைவது குறைந்துள்ளது. சுருங்கச் சொன்னால் நுகர்வுக் கலாசாரத்துக்குள்ளே மூழ்கிக் கிடந்த நாம் அத்தியாவசியங்களோடு வாழப் பழகிக்கொண்டிருக்கிறோம். எமது ஆன்மீகத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது ஆலயங்கள் எல்லாம் பூட்டப்பட்ட நிலையில். நாம் தனிமையில் அர்த்தமுள்ள விதமாகச் செபிப்பதற்கு இது ஒரு பெரும் சவால். பல சந்தர்ப்பங்களில் நாம் செபங்களைச் சொன்னோம். பாடமாக்கிய, புத்தகங்களில் உள்ள செபங்களைச் சொன்னோம். ஆனால் உண்மையில் செபித்தோமா என்பது பெரும் கேள்வி. அர்த்தமுள்ள விதமாகச் செபித்தோம் என்றால் நமது சிந்தனையிலும் வாழ்விலும் கணிசமான ஏதும் உண்டா என்று சிந்திப்பது அவசியம். (கதை) மாற்று வழிக்கு ஓர் உதாரணம்

ஆதித் திருச்சபையில் இல்லங்களில்தான் வழிபாடுகள் நடாத்தப்பட்டன. 2ம் வத். சங்கமும் இல்லத் திருச்சபை பற்றிக் கூறுகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இல்ல வழிபாடுகள் பற்றிப் பல விதங்களில் கூறியிருக்கின்றார். இன்றைய உரையில் இல்ல வழிபாடு பற்றியே நான் கூற விரும்புகின்றேன். முன்னர் கூறிய ஏனைய விடயங்கள் பற்றி படிப்படியாகப் பார்ப்போம். நாம் ஆலயம் செல்ல முடியாத இச் சந்தர்ப்பத்தில் இல்ல வழிபாடுகளை அர்த்தமுள்ள விதமாக நடாத்த முடியுமா என்று சிந்திப்பது நம் அனைவருக்கும் நன்மை பயக்கும்.

**பார்வையற்ற ஒருவர். தெருவில் அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார். அவரருகே.... ஒரு டப்பா. ஒரு பலகை. பலகையில் ஒரு வாசகம்: "நான் ஒரு கண் இல்லாத பார்வையற்றவன்! உதவுங்க!" போவோர் வருவோர் பலரிருக்க ஓரிரு நாணங்களே அந்த டப்பாவில் விழுந்து கிடந்தன அவ்வழியே வந்தார் ஒரு வழிப்போக்கர். பார்வையற்றவரைப் பார்த்தார். வணக்கம் சொன்னார். விழுந்துகிடந்த ஓரிரு நாணயங்களைப் பார்த்தார். எழுதப்பட்ட வாசகத்தையும் பார்த்தார். நிதானமாய் யோசித்தார். முடிவு செய்தார். பலகையை எடுத்தார். வாசகத்தைக் கொஞ்சம் மாற்றி எழுதினார். அதே இடத்தில் வைத்தார். அப்படியே போய் விட்டார். அடுத்த ஐந்து மணி நேரத்தில்... நிரம்பி வழிந்தது டப்பா. டப்பாவைச் சுற்றிலும் வேறு சில்லறைகள் சிதறிக் கிடந்தன. அடுத்த நாள் அதேபோல் வந்து நின்றார் அதே வழிப்போக்கர். பார்வையற்றவரின் டப்பாவில் சில்லறைகள் நிரம்பி வழிந்ததைக் கண்டார். புன்னகைத்து அவருக்கு வணக்கம் சொன்னார். அவரிடம் கேட்டார் அந்தப் பார்வையற்றவர்: "பலகையில் வாசகத்தை மாற்றி எழுதினீர்களா? எனக்குத் தாராளமாகச் சில்லறை விழுகிறதே! என்ன எழுதினீர்கள்?" வாசித்துக்காட்டினார் அந்த ஞானமுள்ள வழிப்போக்கர்: நான் மாற்றி எழுதியது இதுதான்: "இது ஓர் அழகான உலகம். என்னால்தான் பார்க்க முடியவில்லை. உதவுங்கள்!" பார்த்தீர்களா! ஒரு மாற்றுச் செயலின் விளைவை? அதன் வெற்றியை?**

மாற்றம் ஏற்படும், ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆலயங்களுக்கு வழிபாடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மாற்று வழி

இல்ல வழிபாடுக்கான அம்சங்களை உதாரணத்துக்கு நான் இங்கே தருகிறேன். வீட்டில் உள்ள அனைவரும் செபிக்க ஒன்று கூடும் நேரத்தில் பின்வரும் அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

- வருகைப்பாடல்.
- மன்னிப்பு (மௌனமாக) நாம் இறைவனின் பிரசன்னத்தில் உள்ளோம். அவர் நற்பிள்ளைகளாய் எப்போதும் வாழவில்லை, என்ற உணர்வை ஏற்படுத்துதல்.
- புகழ்ச்சிப் பாடல்
- ப.ஏ. வாசகம்
- பதிலுரைப் பாடல்
- பு.ஏ. வாசகம் - திருமுகங்களிலிருந்து
- நற்செய்தி

மூன்று வாசகங்களின் சுருக்க உரையை ஒருவர் சொல்லலாம். (மூன்று வாசகங்களையும் கட்டாயம் எடுக்கவேண்டும் என்று அல்ல. ஒரு வாசகத்தை எடுத்து அதை ஆழமாகச் சிந்திக்கலாம்.)

**சிந்தனைப் பகிர்வு:**

கடைசியாக ஒன்று கூடிய பின்னர் ஏற்பட்ட மகிழ்வான / துக்கமான நிகழ்வைப் பகிரலாம். உ+ம் சிறுவன் / சிறுமி குடும்பத்தின் இன்னுமோர் உறுப்பினரால் புண்படுத்தப்பட்டேன். அந்த உறுப்பினர் அச் சிறுவனை அணைத்துக் கொள்ளல் (விளக்கம் வழிபாட்டின் பின்). தந்தை தனது வேலைத்தலத்தில் ஏற்பட்ட மகிழ்வான நிகழ்வைக் கூறலாம். அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறலாம். இவ்வாறு அந்தக் குடும்ப உறவு படிப்படியாக வலுவடையும். அந்த வாரத்தில் தாம் சந்தித்த நல்ல நிகழ்வுகளை நினைந்து நன்றி கூறலாம். பின்னர் அயலில் உள்ளவர்களின் தேவைகள், துன்பங்களுக்காக செபிக்கலாம். இவை முடிந்ததும் ஒருவருக்கொருவர் சமாதானம் கூறலாம்.

இறுதிப் பாடல்.

நிறைவாக உணவுப் பகிர்வு - தாய் உணவின் மீது ஆசீர்கூறிச் செபிக்கலாம்.

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

## இறையுணர்வு

எல்லாம் இழந்துவிட்டோம் என்று கூறுகிறோம். இழப்பது பெறுவதற்கே என்ற உண்மையை அறிந்துகொள்வோம். புனித லொயோலா இஞ்ஞாசியார் ஆண்டவரைப் பார்த்து இவ்வாறு கூறினார்: " இறைவா! எல்லாம் உமதே! அனைத்தையும் எடுத்துக்கொள்ளும். எனக்கென்று எதுவும் இல்லை. உடல், உயிர், அறிவு, ஆற்றல் எல்லாம் உமதே. அனைத்தையும் எடுத்துக்கொள்ளும் உம் அன்பை மட்டும் கொடு" என்று அந்த அன்பு வறுமை வடிவில், வெறுமை வடிவில், வியாதி வடிவில், மரண வடிவில் வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்றாராம். இறை நம்பிக்கை மிகுந்தோலில் இறையுணர்வு போராட்டமாயிருக்கும். நாமும் இறையுறவில் இணைந்திடுவோம்.

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்

**முடிவுரை**

எமது நிறுவுனரின் கனவு விருட்சத்தில் எம் ஆதித்தாய்மார் ஒவ்வொரு கிளைகள், அதில் ஒட்ட வைக்கப்பட்ட நாம் அதன் ஊற்றை இயல்பாகக் பெறுபவர்கள். எம் அன்னையர் ஒவ்வொருவர் வாழ்வும், எமது வாழ்வுக்கான திறந்த புத்தகம். காலங்கள் மாறலாம், சூழல்கள் மாறலாம் மக்களின் வாழ்வின் தேவைகளும், நிலைப்பாடுகளும் அடிப்படையில் ஒன்றுதான். அன்று இருந்த அதே ஆன்மீக வறட்சி இன்றும் எம்மத்தியில் இருக்கின்றதல்லவா?

எனவே, எமது அழைப்பை உணர்ந்து, எமது வாழ்வின் பொறுப்பு உணர்ந்து எம் அன்னையர்களுக்கு இருந்த அதே மனநிலையை அவர்களது வாழ்வுப் புத்தகத்தில் படித்து, ஒரே கரிசத்தில் எம்மை நனைத்து, "இறைவன் மாத்திரமே" என்ற நற்கூரத்தில் இணைக்கப்பட்டவர்களாய் எமது வாழ்வைச் சரித்திரமாக்குவோம்.

ஐரோப்பிய முத்துக்களே! நிறுவுனர் தந்தையுடன் விண்ணகச் சோலையின் மலரெனவே, இறைவனை மகிமைப்படுத்துவீர்களாக.

அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்

# இளையோர் காவியம்

நீ வீழ்ந்தவன் அல்ல
வீழ்ந்து கிடப்போரைத்
தூக்கிறவன் நீ

உன்னால்
துடைக்கப்படும்
துடைக்கப்படாத
கண்ணீர் துளிகள்

நீரை அடித்துச் செல்லும் ஆறு
நீ
துயரங்களைக்
காவிச் செல்லும் ஆறு

உன் இளமையின் வேர்
பொது நலத்தின் பேர்

உன் தடைகளை
உடைக்க முடியாமல்
காவல் இருக்கிறது "
தலைக்கனங்கள்

தடைகளில் கூட
சிலை செதுக்கி விட்டு
தடைகளைக் கடக்கிறவன் நீ

உன் வாழ்க்கை
ஏழைகளின்
வாழ்விடத்தின் பாதை

உன் உழைப்பு
பகிரப்படும்போது
மீட்கப்படும் உலகம்

நீ இடிந்துபோன
மனச்சுவர்களின்
கட்டுமானப்பணி
உன் நீதியில் குமுறலில்
அடங்கத்தான் போகிறது
அநியாயத்தின் கொட்டம்

நீ காற்றுக்கு மட்டுமல்ல
புயலுக்கும் சொந்தக்காரன்

உன் உருமாற்றங்கள்
நிகழும் காலத்தின்
தேவைகள் கருதி

உனக்குத் தெரியாமல்
யாரோ ஒருவன்
வழிநடத்துவான்
உன்னை
அவருடைய
பெயர் தான்
கடவுள்...

(தொடரும்...)

உயிரோவியன்

**இளையோராகிய நாம்
நேர்மறை உணர்வுகளை
வளர்ப்போம்
உருவாகி
உருவாக்குவோம்
ஓர் புதிய உலகை**

# தெய்வம்



சிறுகதை

இரவு பதினொரு மணியிருக்கும். சதீஸிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நடுங்கும் குரலில் பேசினான். பேச்சுச் தெளிவாய் இருக்க வில்லை . வீட்டில் தனியாக இருக்கிறான். என்ன ஆபத்தோ தெரியவில்லை. நானும் போக முடியாது. தடுமாறிக்கொண்டிருந்தேன்.

"என்ன சதீஸ் ஏதாவது பிரச்சினையா?"

ஏதோ சொல்ல முயன்றான்.புரிய வில்லை. திரும்பவும் அழுத்திக் கேட்டேன்.

திரான்ஸி வைத்தியசாலையில் நிற்பதாகச் சொன்னான்.

"ஏன் அங்க போனனீங்கள்?"

"எனக்கு ஏலாம் வந்து, பொம்பியே வந்து கொண்டு போனது"

"ஏன்? என்ன பிரச்சினை ?"

அவனிடமிருந்து பதிலில்லை. எனக்கு நெஞ்சு படபடத்தது.

"சதீஸ் ஏதாவது பிரச்சினையா?" அவன் ஈனக்குரலில் மெதுமெதுவாய் அனுங்கினான்.

"அண்ணை வீட்டை போக வேணும். ஏதாவது உதவி செய்வீங்களா?"

"இப்ப ஏன் உங்க போனனீங்கள்?"

"அண்ண அதுதானே சொன்னன் ஏலாம் வந்து பொம்பியே வந்ததெண்டு …"

அவனது குரலில் மெல்லிய எரிச்சல் கலந்திருந்தது.

"இப்ப எப்பிடி இருக்கு?"

"இப்ப ஓகே என்று டொக்ரர் சொல்றார்".

"அவை ஏதாவது ரெஸ்ற் செய்தவையே?"

"செய்தவை"

"பிரச்சினை ஒண்டும் இல்லைத்தானே!?"

ஆர்வமும் பயமும் தொடரக் கேட்டேன்.

"இல்லை பொசிற்றிவ்வாம்"

"என்ன…. என்ன !"
எனது குரல் உயர்ந்தது.

"இல்ல பொசிற்றிவாம்" அவனது குரல் சோர்ந்திருந்தது. எனக்குத் 'திக்' கென்றது.

"அப்ப ஏன் வீட்டை !"

"ஹொஸ்பிற்றல்ல இடமில்லையாம்"

"அப்ப , அவை கொண்டே விடமாட்டினமாமோ!"

"இல்லையாம். நான் தனிய மெல்ல மெல்ல போவன். ஆனால் பஸ் எடுத்து, ட்ராம் எடுத்துப்போக மற்ற ஆக்களுக்குத் தொற்றி விடுமே என்று யோசிக்கிறன்".

இந்த நிலையிலும் அடுத்தவர் மேலுள்ள அவனது அக்கறை என்னைக் கசியச்செய்தது. அதேவேளை இந்தப் பெரிய நாட்டினது அரசு இயந்திரத்தின் பொறுப்பற்ற தன்மையை நினைக்கக் கோபம் கோபமாக வந்தது.

பிறகு என்ன….! தனிமைப் படுத்தல், சங்கிலி உடைத்தல் என்ற வறுத்தெடுத்தல்கள்! இயலாமை என்பது வேறு பொறுப்பற்ற தனம் என்பது வேறு.

என்னைப் பயம் தொற்றிக் கொண்டது. நோய் இல்லையென்றால் பிரச்சினை யில்லை. நோயாளியான சதீ ஸிற்கு நான் எப்படி உதவுவது? இந்த இடத்தில் நான் எப்படி அவனைத் தவிக்க விடுவது? அவன் இலகுவில் உதவி கேட்கக்கூடிய ஆள் இல்லை.

இப்போ கேட்டு விட்டான். எனக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. அந்தக்கணத்தில் நான்சதீசு டன் என்ன உரையாடினேன் என்பது நினைவில்லை. சம்பந்தா சம்பந்த மில்லாமல் ஏதேதோ அலம்பியிருப்பேன்.

அவனுக்கு உண்மையில் உதவ விரும்பினேன். ஆனால், பயம் என்னை விரட்டியது. சிறிது நேரத் தில் அவனது தொலை பேசி துண்டித்துக்கொண்டது.

விபத்தா அல்லது அவனா கத் துண்டித்தானா தெரியவில்லை. குற்ற உணர்வில் நான் துவண்டேன். அன்று இரவு முழுவதும் அவனை மாறி மாறி அழைத்துக் கொண்டிருந்தேன். தொடர்பில்லை.

தொடர்ந்து நான்கு நாட்கள்.

ஐந்தாவது நாள் 'ஹலோ' என்றான்.

கடவுளைக் கண்டது போல இருந்தது.

"சதீஸ் என்ன நடந்தது பிறகு அண்டைக்கு"

ஆவல் மேலிடக் கேட்டேன்.

'இல்லை அண்ணை , உங்கட இடத்தில் நானிருந்தாலும் வந்திருக்க மாட்டேன்' என்று அவன் சொன்னபோது மெதுவாய் ஆசுவாசம் அடைந்தேன். அவன் யதார்த்தத்தை, நிலமையின் தீவிரத்தைப் புரிந்துகொண்டிருந்தான்.

"பிறகு எப்பிடி வீட்டை போனனீங்கள்?"

"றஷீத்திற்கு போன் பண்ணினனான். அவன் றிஸ்க் எடுத்து வந்தான்" என்ற வன் தனது மீதிக்கதையைச் சொல்லத் தொடங்கினான்.

றஷீத் வந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

நான் வைத்தியசாலை வரவேற்பறையில் ஒதுங்கியிருந்தேன். காலில் போட்டிருந்த வீட்டுச்செருப்புடன். நோய்த்தொற்று என் னில் இருக்கும் செய்தி வைத்திய சாலை யின் அந்த வட்டத்திற்குப் பரவியிருந் தது. எல்லோரும் பயத்தோடும் வெருட்சி யோடும் என்னைப் பார்த்தனர். அங் குள்ள தாதிமாரிடம் உதவி கேட்டபோது அவர்கள் கேளாதது போல பயத்தில் விலகினர்.

மூக்கு அடைப்பது போலிருந்தது. சீறினேன். இரத்தம் வந்தது. எழுந்து அந்தக் கடுதாசியைப் போடப் போகக் கூடப் பயமாக இருந்தது. மடித்து பொக் கற்றினுள் வைத்தேன்.

றஷீத் அழைத்தான். அவனது கார் பலத்த பாதுகாப்பாக இருந்தது. அவன் கையுறை, முகக்கவசம் எல் லாம் அணிந்திருந்தான். அவனை அடை யாளம் காண்பது அவ்வளவு இலகு வானதல்ல. காரின் பின் ஆசனத்தை பொலித்தீனால் கவர் பண்ணியிருந்தான். காரில் தொடாது நான் ஏறுவதற்காக அவன் பின் கதவைத்திறந்து வைத் திருந்தான். தனக்கும் எனக்கும் இடை- யில் கண்ணாடி மறைப்பொன்றைப் போட்டிருந்தான். வீடு திரும்பியதும் எப்படி யும் காரைக் கழுவுவான் என்பதை ஊகித்துக்கொண்டேன்.

கார்ப் பயணத்தின் போது றஷீத் எனக்கு நம்பிக்கை தரும் வார்த் தைகளைப் பேசிக்கொண்டே வந்தான். அவை எனக்கு மிகுந்த தென்பைத் தந்தன. இந்த வேளை அவன் எனக் குத் தெய்வம் போலவே இருந்தான்.

கார் வீட்டை அடைந்தது. அவன் இறங்கிவந்து மிகக்கவனமாகப் பின்கதவைத் திறந்துவிட்டான். கேற்றி லிருந்து எனது வீடு 50 மீற்றர் தூரத் தில் இருந்தது. அவன் என்னுடன் உள்ளேவர எத்தனித்தான். நான் அனு

**மனோ சின்னத்துரை**

மதிக்கவில்லை . அதற்குமேலும் அவ னைத் தொந்தரவு செய்ய நான் விரும்ப வில்லை. றஷித் நான் போய்க் கதவு திறக்கும் வரை என்னையே பார்த்தபடி நின்றான். உள்ளே போன தும் கட்டிலில் விழுந்தேன். றஷீத் என் கனவில்

சஞ்சரித்துக்கொண்டிருந்தான். என் கண்கள் நனைந்தன.

அடுத்தநாள் காலை எழுந் தேன். பசிப்பது போல இருந்தது. இல்லா விட்டாலும் சாப்பிடவேண்டும் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. எழுந்து சமைக்க முடியவில்லை. நான் இருந்த அதே வளவுக்குள் என் வீட்டு உரிமை யாளரும் வசித்தார் அவரும் ஒரு தமி ழர். நான் வசித்த சிறிய வசிப்பிடத்தின் முன்புறமாக அவரது வீடு இருந்தது. எனது வசிப்பிடத்திற்கும் அவரது வீட்டிற் கும் இடையில் 30 மீற்றர் நடைபாதை இருந்தது. நடுத்தர வயதான அவர் தனது குடும்பத்துடன் வசித்துவந்தார். நான் கூச்சத்தைவிட்டு அவரிடம் உதவி கோரினேன்.

இடியப்பமும் சொதியும் சாப் பிட்டால் நல்லது போல இருந்தது. ஆனால் நான் கேட்கவில்லை . எதை யாவது தந்தாலும் பரவாயில்லை என்றே தோன்றியது.

'தம்பி குறை நினைக்காதேயும்' என்றார்.

'அங்கிள் நீங்கள் நடுவழியில் கொணர்ந்து வைத்துவிட்டுப் போனால் போதும். நான் வந்து எடுத்துக் கொள்கி றேன் என்றேன். பாத்திரங்கள்கூட நீங்கள் பாவிக்கத் தேவையில்லை. ஒரு பொலித்தீன் பைக்குள் போட்டுத் தந்தால் போதும் என்று மேலதிக பாதுகாப்பு ஆலோசனையையும் வழங்கினேன்.

'இல்லை தம்பி, இஞ்ச பிள்ளயளும் இருக்கினம். நானும் வருத்தக்காரன் வேறை' என்று தெளிவாகவே முடித்துக்கொண்டார்.

'இல்ல பரவாயில்லை அங்கிள். நான் விளங்கிக்கொள்கிறேன்' என்றேன்.

உண்மையில் நான் அவரது நிலையைப் புரிந்துகொண்டேன். அவரில் எனக்குக் கோபம் வரவில்லை. வருத்தமாயிருந்தது. அழுகையழுகை யாய் வந்தது. கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தேன்.

தொலைபேசி அடித்தது.

வாசலில் றஹீத் நின்று கொண் டிருந்தான். அவனது கையில் சாப்பாட்டு பார்சல் இருந்தது. நான் கிட்டப்போய் அவனைக் கட்டி அணைக்கத் துடித்தேன். அவனைக் கட்டி அணைத்து அழ வேண்டும் போலிருந்தது. வேகமாய் நடந்து 2 மீற்றர் தொலைவில் சடுதியாய் நின்றேன். எனக்குள் வார்த்தைகள் வரவில்லை . குனிந்தபடி நின்றேன். கண்களிலிருந்து தாரைதாரையாக ஓடியது.

அவன் சிரித்தான். என்னைத் தேற்றினான். ஆறுதல் வார்த்தைகள் பேசினான் அவை எனக்கு மீண்டும் மீண்டும் தென்பைத்தந்தன. கேற்றில் உணவைக் கொழுவிவிடச் சொன்னேன். அவன் விடைபெற்றான்.

அவனது உணவு இரண்டு நாட்களுக்குப் போதுமாயிருந்தது. அவனது தாயார் மூலமாகப் பக்குவமாகச் சமைத்து, தனித்தனிப் பாத்திரங்களில் கொணர்ந்திருந்தான். வரண்டுபோன நாவிற்கு அவை அமிர்தமாயிருந்தன.

அடிக்கடி அவன் தொலை பேசியில் உரையாடி எனது தேவைகளை அறிந்த வண்ணமிருந்தான்.

இப்போது நான் மெது மெதுவாகச் சமைக்கத் தொடங்கிவிட்டேன்.

நேற்று முழுகியதிலிருந்து நான் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டதாக உணர்கிறேன் அவன் வழமை போல சிரிக்கத்தொடங்கினான். அவனது சிரிப்பில் மலர்க் கொத்தொன்று சிலிர்த்தது.

நன்றி: கொரோனா வீட்டுக் கதைகள்

## இவர் வழியாக, இவரோடு இவரில்…

இது நற்கருணை மன்றாட்டின் உச்சக்கட்டமும் ஆடம்பர முடிவுமாகும். இயேசுவின் உடலும் இரத்தமுமான இந்த அருளடையாளம் நமக்கு நிறைவூட்டுவது:

- பழைய ஏற்பாட்டில் பாலைவனத்தில் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பு "கொள்ளி வாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்து. கடிக்கப்பட்டோரில் இதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்" (எண் 21:8)
- இயேசு சிலுவையின் மீது உயர்த்தப்பட்டார் : (யோவா 3:14) மக்களுடைய பார்வையில் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். (லூக். 23:35) நம்முடைய மீட்புக்காக பலியாக்கப்பட்டார் (யோவா 12:32)
- இயேசு இறந்தோரிடமிருந்து எழுப்பப்பட்டார் (தி.ப1:9). இது மீட்பின் முழு வரலாறு. நம் மீட்பின் வரலாறு. இந்த அப்பத்தில் நமது ஆராதனைக்காக உயர்த்தப்பட்டுள்ளது. இது யூதர்களின் பாஸ்காவான எழும்பாத (புளிக்காத) மாவினால் செய்யப்பட்ட அப்பம் அல்ல. எழுப்பப்பட்ட உயிர்த்தெழுப்பப்பட்ட அப்பம் இது.
- அவையில் உள்ளோர் தங்கள் அறிக்கையால் அதை ஒப்புக்கொண்டு 'ஆமென்' என்று பதிலளிக்கின்றனர். (ஆமென்: என்றால் எபிரேய மொழியில் உண்மை, உறுதியானது, நிரந்தரமானது என்றும் அதை நாங்கள் விசுவசிக்கிறோம் என்றும் பொருள்)
- "நீங்கள் மானிட மகனை உயர்த்தியபின்பு இருக்கிறவர் நானே என்பதை அறிந்துகொள்வீர்கள்" (யோவா 8:28)

# பெண்களுக்குள் ஆசி பெற்றவர்

அருட்பணி தே.அல்போன்ஸ்

பெண்ணடிமைத்தனம் என்பது நமது சமூகத்தில் பரவலாகக் காணப்படும் ஒரு பெரும் தீமை. ஆணாதிக்கத்தின் மறுபக்கமே அது. அதாவது, ஆண்களை விடப் பெண்கள் அறிவிலும் திறமைகளிலும் தாழ்ந்தவர்கள், அதனால் அவர்கள் மாண்பிலும் சமூகநிலையிலும் இரண்டாம் தரத்தினர், ஆண்களுக்கு அடங்கி வாழவேண்டியவர்கள் எனும் சிந்தனையும் செயல்பாடுமே பெண்ணடிமைத் தனம், அது பெரும்பான்மையான நம் குடும்பங்களிலும் சமூகத்திலும் புரையோடிப் போயுள்ளது என்பது அன்றாட அனுபவ மெய்மை.

பெண்கள் வலுக் குறைந்தவர்கள், எளிதில் சோதனையில் விழக்கூடியவர்கள்,ஆண்கள் பாவம் செய்யக் காரணமானவர்கள், தீட்டானவர்கள் என்பன போன்ற ஆணாதிக்கச் சிந்தனைகள், படிப்பினைகள் பல்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் எல்லா உலகச் சமயங்களிலும் உள்ளன. இவற்றின் அடிப்படையிலேயே பெண்கள் அனைத்திலும் ஆண்களைச் சார்ந்தும் அவர்களுக்குப் பணிந்துமே வாழவேண்டும் எனும் சட்டங்களும் நடைமுறைகளும் நியாயப்படுத்தப் பட்டுள்ளன.

இத்தகைய சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் கிறிஸ்தவம் விதிவிலக்கு அல்ல. "இனி... ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்" (கலா 3:28) என்பது கிறிஸ்தவத்தின் கொள்கை முழக்கம். ஆனால் நடைமுறையில் திருச்சபையின் பல்வேறு உரிமைகளிலும் பணிப்பொறுப்புகளிலும் சமவாய்ப்பு மறுக்கப்பட்ட இரண்டாம்

> **"அப்போது அவர் (எலிசபெத்) உரத்த குரலில் 'பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்'... என்றார். (லூக் 1:42)**

தரத்தினராகவே பெண்கள் வைக் கப்பட்டுள்ளனர்.

காலம்காலமாக சமூகத்திலும் திருச்சபையிலும் நடைமுறையிலிருக்கும் இத்தகைய பாகுபாடுகள் ஆண்களிடம் ஆதிக்கப்போக்கையும் பெண்களிடம் தாழ்வுமனநிலையையும் உருவாக்கியுள்ளன. அதனால் அவர்களும் சமூகமுமே முழு வளர்ச்சி அடையாது முடமாகியே நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பின்னணியில் பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" (லூக் 1:28) என இறைவனால் அனுப்பப்பெற்ற வானதூதரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத்தும் மரியாவை வாழ்த்துவது (லூக் 1:42) மிகவும் அர்த்தமுள்ளது ஆகிறது.

எனெனில், இறைமகன் இயேசுவின் தாய் ஆகும் பேறு மரியாவுக்கே உரியது எனினும் அவரும் பெண் என்பதால் அவர் பெற்ற பெருமையிலும் சிறப்பிலும் ஒருவகையில் எல்லாப் பெண்களுமே பங்குபெறுகின்றனர். எவ்வாறெனில் மரியா இயேசுவை வளர்த்து உலகிற்கு அளித்ததுபோல் தங்கள் தாய்மையாலும் தனிப்பண்புகளாலும் தங்கள் பிள்ளைகளை "ஞானத்திலும் உடல்வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய்" (லூக் 2:52) வளர்செய்து, உலகம் உய்த்திட உவப்புடன் அளிக்க பெண்கள் அனைவருமே அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆம், பெண்மை பெருமைக்கு உரியது, ஆசி பெற்றது. ஏனெனில், மனித இனத்தின் தொடர்ச்சிக்கு இன்றியமையாத தாய்மை பெண்களுக்கே உரியது. பிள்ளை வளர்ப்பிலும் மிகப்பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்களே. குடும்பப் பொறுப்பும் குடும்ப உறவுகளைக் காத்து வளர்ப்பதும் பெரிதும் பெண்களுக்கே



உரிய கடமைகளாகவே உள்ளன.

பல வேளைகளில் ஆண்களின் சக்தியாக இருப்பவர்களும் பெண்களே. ஒரு சமூகத்தின் பண்பாட்டைக் காத்து, அடுத்த தலைமுறையினருக்கு அதைத் தரும் பணியும் பெரும்பாலும் பெண்களையே சார்ந்திருக்கிறது. அதுபோல் குடும்பம் எனும் குட்டித் திருஅவையின் தலைமைக் குருவாகத் தந்தையுடன் இணைந்து சமமாகச் செயற்படுபவர் தாயே. பிள்ளைகளுக்கு இறை உணர்வையும் அடிப்படை சமய - சமூகக் கல்வியையும் ஊட்டுபவர்களும் அன்னையர்களே. இத்தகைய அரும்பெரும் பணிகளைச் செய்யும் அனைத்துப் பெண்களும் ஆசிபெற்றவர்களே. அவற்றை இணையற்ற அன்புடனும் தியாகத்துடனும் செய்த மரியா பெண்களுள் விதி விலக்கானவர் என்பதை விட இமயமலைத் தொடரில் எவரெஸ்ட் சிகரம்போல் பேறுபெற்றபெண்களுள் சிறந்துயர்ந்து நிற்பவர்தாம் அவர்.

இதனால்தான் இயேசுவும் தம் தாய் மரியாவை மட்டுமல்ல, பெண்கள் அனைவரையுமே ஆசி பெற்றவர்களாகவே கருதவும் நடத்தவும் செய்தார். பெண்கள் பலருக்கு அவர் பேருதவிகள் செய்தார் (பேதுருவின் மாமியார் -மாற் 1:30-31 இரத்தப்போக்குடைய பெண், இறந்த சிறுமி - மாற் 5:2143, கானானியப் பெண் - மாற்கு 7:24-30, பாவியான ஒரு பெண் - மாற் 14:3-9, நயீன் ஊர்க் கைம்பெண் - லூக் 7:11-15, சமாரியப் பெண் - யோவா 4, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் - யோவா 8:1-11 மார்த்தா , மரியா - யோவா 11),

அடுக்களையே பெண்களின் கதி எனும் மார்த்தாவின் அடிமைத்தன சிந்தனையை மறுத்து, தம் சீடராகி, சமய சமூகப் பொதுப்பணிகளில் ஈடுபடமுனைந்த மரியாவின் உரிமையை இயேசு நிலை நாட்டுகிறார்.(லூக் 10:38-42).

பெண்கள் சிலரையும் தம் ஆண் சீடர்கள் போல் தம்முடன் ஊர் ஊராக, நகர்நகராக அழைத்துச் சென்று,தமது நற்செய்திப் பணியில் அவர்களையும் உடன் உழைப்பாளர்கள் ஆக்கினார் (லூக் 8:1-3), அந்தப் பெண் சீடர்களும் ஆண் சீடர்களைப் போல் சிதறி ஓடாமல், இயேசுவின் சிலுவை அருகில் வரை இறுதிவரை அவருடன் இருந்தனர். அவர்களுக்கே அவர் தமது உயிர்ப்பின் முதல் சாட்சிகள் ஆகும் பேற்றினையும் அளித்தார்.

அவரது இந்த மாற்று மாதிரி யைப் பின்பற்றித்தான் திருஅவையின் தொடக்க காலத்திலும் (உரோ 16) தொடர்ந்த வரலாற்றிலும் ஆண்களுக்கு இணையாகவும் பலவேளைகளில் அவர்களைவிட அதிக ஈடுபாட்டுடனும் பெண்கள் பணியாற்றியுள்ளனர்.

ஆண்கள் - பெண்களுக்கு இடையே உடல், உள்ள அமைப்புகளில் முக்கிய சில வேறுபாடுகள் உண்டு, அவை இயல்பானவை, நலமானவை. அவை போற்றிக் காக்கப்படவேண்டும். அப்போது தான் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நிறைவாக்க முடியும். எனினும், வேறுபாடு என்பது ஒன்று, ஏற்றத்தாழ்வு என்பது இன்னொன்று. ஆண், பெண் வேறுபாடு ஒருவரை ஒருவர் நிறைவாக்க உதவவேண்டுமே அன்றி அவர்களுக்கு இடையே உயர்வு தாழ்வுக்குக் காரணம் ஆகிவிடக்கூடாது.

ஆணிடமிருந்து பெண் வேறுபட்டவர் என்பதால் ஆணுக்கு அவர் தாழ்ந்தவர் அல்ல. ஏனெனில், இறைவனின் படைப்பிலும் இயேசுவின் சீடத்துவத்திலும் ஆணும் பெண்ணும் சமமானவர்களே. எனவே மரியாவைப் பேறு பெற்றவர், ஆசி பெற்றவர் எனப் போற்றிப் பெருமைப்படுத்தும் நாம் எல்லாப் பெண்களையும் உயர்வாகவும் மதிப்பாகவும் நடத்தக் கற்றுக்கொள்வோம்.

பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தும், தொடர்ந்து நிலைக்கச் செய்யும் அத்தனை சமய, சமூக, பண்பாட்டுக் கூறுகளையும் கண்டறிந்து களைந்தெறிவோம். குடும்ப வாழ்விலும் சபை, சமூகச் செயல்பாடுகளிலும் ஆண்களுக்கு இணையான மதிப்பும் உரிமையும் தலைமையிலும் பணிப் பொறுப்புகளிலும் சம வாய்ப்பும் பெண்களுக்கு வழங்க முன்வருவோம்.

நம் உறவுகளிலும் பணிகளிலும் ஆண்-பெண் போட்டியுணர்வு, ஆதிக்கப்போக்கு என்பவற்றிற்கு மாற்றாக கூட்டுப் பொறுப்பையும் தோழமை உணர்வையும் வளர்க்க முயலுவோம்.

## தவக்கால நிதி சேகரிப்புகள் - பங்குகள் - 2021
## கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்

| இல | திகதி | பங்குகள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 25.03.2021 | கொய்யாத்தோட்டம் | 15,200.00 |
| 2 | 25.03.2021 | செம்பியன்பற்று | 5,000.00 |
| 3 | 26.03.2021 | சுன்னாகம் | 20,320.00 |
| 4 | 29.03.2021 | நல்லூர் | 5,220.00 |
| 5 | 29.03.2021 | நாவாந்துறை | 66,100.00 |
| 6 | 29.03.2021 | குமுழமுனை | 4,500.00 |
| 7 | 29.03.2021 | முழங்காவில் | 15,000.00 |
| 8 | 29.03.2021 | குருநகர் | 71,000.00 |
| 9 | 30.03.2021 | திருநல்வேலி | 5,700.00 |
| 10 | 31.03.2021 | புனித யாகப்பர் ஆலயம், இளவாலை | 12,300.00 |
| 11 | 31.03.2021 | மணியந்தோட்டம் | 26,000.00 |
| 12 | 05.04.2021 | மிருசுவில் | 20,000.00 |
| 13 | 06.04.2021 | தர்மபுரம் | 5,000.00 |
| 14 | 06.04.2021 | கிளிநொச்சி | 11,727.00 |
| 15 | 07.04.2021 | பேராலயம், யாழ்ப்பாணம் | 113,500.00 |
| 16 | 08.04.2021 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், யாழ்ப்பாணம். | 18,300.00 |
| 17 | 09.04.2021 | மண்டைதீவு | 7,200.00 |
| 18 | 12.04.2021 | குழமங்கால் | 10,400.00 |
| 19 | 12.04.2021 | ஆனைக்கோட்டை | 16,200.00 |
| 20 | 12.04.2021 | நெடுந்தீவு | 3,100.00 |
| 21 | 15.04.2021 | பரந்தன் 1 | 1,500.00 |
| 22 | 15.04.2021 | கோப்பாய் | 15,000.00 |
| 23 | 19.04.2021 | கொழும்புத்துறை | 24,500.00 |
| 24 | 19.04.2021 | பருத்தித்துறை | 33,400.00 |
| 25 | 19.04.2021 | ஊஉ காவற்றுறை | 73,500.00 |
| 26 | 19.04.2021 | பளை | 12,000.00 |
| 27 | 19.04.2021 | சாவகச்சேரி | 20,180.00 |
| 28 | 19.04.2021 | கட்டைக்காடு | 7,300.00 |
| 29 | 20.04.2021 | புதுக்குடியிருப்பு | 34,750.00 |
| 30 | 22.04.2021 | பெரியவிளான், இளவாலை | 10,200.00 |
| 31 | 23.04.2021 | இளவாலை | 12,254.00 |
| 32 | 27.04.2021 | மல்லம், உடுவில் | 9,000.00 |
| 33 | 28.4.2021 | மாங்குளம் | 1,060.00 |
| 34 | 28.04.2021 | மானிப்பாய் | 30,000.00 |
| 35 | 28.04.2021 | மாதகல் | 13,120.00 |
| 36 | 28.04.2021 | சில்லாலை | 5,100.00 |
| 37 | 30.4.2021 | இரணைப்பாலை | 18,500.00 |
| 38 | 03.05.2021 | கரவெட்டி | 6,000.00 |
| 39 | 03.05.2021 | சாட்டி | 17,000.00 |
| 40 | 03.05.2021 | மணற்காடு | 10,000.00 |
| 41 | 03.05.2021 | உருத்திரபுரம் | 5,600.00 |
| 42 | 03.05.2021 | கூழாமுறிப்பு | 6,000.00 |
| 43 | 04.05.2021 | உரும்பிராய் | 15,000.00 |
| 44 | 23.06.2021 | பாசையூர் | 94,000.00 |
| 45 | 23.06.2021 | எழுவைதீவு | 33,886.00 |
| 46 | 09.07.2021 | பண்டத்தரிப்பு | 4,200.00 |
| 47 | 09.07.2021 | பண்டியந்தாழ்வு | 4,650.00 |
| 48 | 19.07.2021 | வட்டக்கட்சி | 2,000.00 |
| 49 | 20.05.2021 | வலைப்பாடு | 4,000.00 |
| 50 | 03.08.2021 | அச்சுவேலி | 6,200.00 |
| | | | 991,667.00 |



# “நற்கருணை” வாழ்வாகும் விருந்து

“கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும் நற்கருணை” என்றது இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம். ஊற்றும் உச்சமும் நற்கருணை என்று ஏற்றுக் கொள்ளும் பொழுது நற்கருணையே வாழ்வின் மையம் என்பது தெளிவாகிறது. கத்தோலிக்க திருச்சபை தொடக்கத்திலிருந்தே நற்கருணைக்கு மைய முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது.

திருச்சபையின் வரலாறே அதுதான். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பிற்குப் பிறகு இயேசுவைமீட்பராக (கிறிஸ்துவாக) ஏற்றுக் கொண்ட மக்கள் ஒன்றாகக் கூடி இறை வார்த்தையைப் பகிர்ந்து, அப்பத்தைப் பிட்டு, இறைபுகழ் கூறி, அதனை உண்டு, அதன் வழியாகத் தங்களின் புதிய அடையாளத்தை அடைந்தனர். திருச்சபையை உருவாக்கியது நற்கருணை கொண்டாட்டம் எனலாம். நற்கருணைக் கொண்டாட்டம் எனும் பொழுது நற்கருணை - ஒரு விருந்து என்ற புரிதல்தான் தொடக்கத் திருச்சபையில் அழுத்தம் பெற்றிருந்தது.

இப்பின்னணியில் நற்கருணைக் கொண்டாட்டம் நற்கருணை விருந்து' என்று அழைக்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்று ஓட்டத்தில் பல்வேறு வரலாறு காரணமாக விருந்து என்ற சிந்தனை சற்று மங்கி, நற்கருணை - ஒரு பலி' என்ற சிந்தனை மேலோங்கியது. நற்கருணை - ஒரு பலி' என்ற சிந்தனை நற்கருணையின் அடிப்படை அம்சம் என்பதனை ஏற்கெனவே கண்டுள்ளோம். இயேசு தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்ததால்தான் நம் அனைவருக்கும் விருந்தாகத் தம்மையே வழங்க இயன்றது. எனவே, பலி அம்சம் நற்கருணையோடு மிக நெருங்கிய தொடர்புடையது. மேலும் நற்கருணையை உருவாக்கும் இன்றியமையாத அம்சம் பலியாகும். இருப்பினும் நற்கருணை - ஒரு விருந்து' என்ற சிந்தனை மறக்கப்படுமானால் நற்கருணையின் முழுமையான புரிதல் இல்லாமல் போய்விடும். இதனை இரண்டாம் வத்திக்கான் சங்கம் கோடிட்டுக் காட்டியது. அதன் விளைவாக நற்கருணை விருந்து என்ற அதன் முக்கிய கூறு பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு வாழ்வாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

### தமிழ் மரபில் விருந்து உணவு

'விருந்து' உணவு என்ற இரண்டு சொற்கள் தமிழ் மரபில் காணப்படுகின்றன. 'உணவு' என்ற சொல்லும் ஆழ்ந்த அர்த்தங்களை உள்ளடக்கியது. மனித வாழ்விற்கு இன்றியமையாதது உணவு. உணவில்லையெனில் மனிதன் வாழ இயலாது. 'உடலார் அழிவாரெனில் உயிரார் அழிவார்' என்பது தமிழ் மரபு.

உணவில்லையென்றால் உடலும், உடலில் ஒட்டியிருக்கும் உயிரும் அழிந்து விடும். இப்பின்னணியில், “வாழ்வுதரும் உணவு நானே.என்னிடம் வருபவருக்குப் பசியே இராது” (யோவா 6:35) என்ற இயேசுவின் கூற்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். இயேசு தம்மை உணவாகவும், விருந்தாகவும் வழங்கினார் என்பது உற்று நோக்கத்தக்கது. உணவு என்பது பசிக்கு உண்பது, உயிரைக் காப்பாற்ற மேற்கொள்ளும் ஒரு முயற்சி.

உணவு தனியாகவும் உட்கொள்ளப்படலாம். ஆனால், விருந்து என்பது சேர்ந்து உண்ணப்படுவது. பிறரோடு உட்கொள்ளப்படுவது. இவ்வகையில் வாழ்வைத் தாம் பெற்றுக் கொள்ளும் முயற்சி மட்டுமன்று, வாழ்வைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் முயற்சியாகவும் விருந்து அமைகிறது. விருந்தைத் தமிழ் மரபு பெரிதும் போற்றுகிறது. 'விருந்தெதிர் பெறுக யானே' என்கிறது பரிபாடல். ஒவ்வொரு நாளும் குடும்பத் தலைவன் விருந்தினரை எதிர்கொண்டு அழைத்து அவர்களுக்கு விருந்து படைத்து நிறைவு பெற விரும்பினான்.

'விருந்துண்டு எஞ்சிய மிஞ்சில் பெருந்தகை நின்னுடன் உண்டலும் புரையது' என்கிறது குறிஞ்சிப் பாடல். தலைவன் தலைவியிடம் விருந்தினருக்கு உணவு படைத்து, மிஞ்சியிருக்கும் உணவைத் தலைவி யோடு பகிர்ந்து உண்பதுதான் நிறை வான வாழ்வு. அல்லது குடும்பத் தர்மம் என்கிறான். இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' (குறள் 81).

இவ்வுலகில் இருந்து, பொருளைப் பேணி இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவுதலே ஆகும் என்கிறார் வள்ளுவர். மற்றுமொரு குறளில் திருவள்ளுவர் விருந்தின் எதிர்காலப் பயனை வலியுறுத்திக் கூறுகிறார். 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு' (86), செல்லும் விருந்தினரைப் போற்றி, வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவனை அவன் விண்ணகத்திற்குச் செல்லும் போது, எப்பொழுது வருவானோ என்று அவனை எதிர்கொண்டு அழைக்க வானத்துத் தேவர்கள் காத்திருப்பார்கள் என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு இலக்கியங்களால் போற்றப்படும் விருந்தோம்பும் பண்பு இன்றைய தமிழர் வாழ்வில் குறைந்து கொண்டிருப்பது உற்று நோக்கத்தக்கது. மீள வாழ்வாக்கப்பட வேண்டியது.

### இயேசுவும் உணவுத் தோழமையும்

இயேசுவின் பணி வாழ்வில் உணவுச் சூழலில் இயேசு சொல்லிய சொற்கள், அவர் காட்டிய தோழமை, அவர் நிகழ்த்திய புதுமைகள் ஆகியவை அவரை மக்களுக்கு இனம் காட்டின. அவரது இறையாட்சி விழுமியங்கள் உணவுத் தோழமையில் வெளிப்பட்டன. இயேசுவுக்கு முந்திய காலக்கட்டத்திலும் உணவுத் தோழமை யூதர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு விழுமியமாக கருதப்பட்டது. உணவை ஒரு குழுவாகச் சேர்ந்துண்பது ஒருவர் ஒருவர் மேல் கொண்ட உறவின் அடையாளமாகவும், சமாதானம், சகோதரத்துவம், ஒப்புரவின் அடையாளமாகவும் காணப்பட்டது.

இயேசுவின் உணவுத் தோழமை பரிசேயர்கள், சதுசேயர்களால் குறை காணப்பட்டது. இயேசு பாவிகளோடும், ஆயக்காரர்களோடும், பெண்களோடும் உணவருந்தியது இவர்களோடு இறைவன் தோழமை கொள்கிறார் என்பதன் அடையாளமாக அமைந்தது. சுருங்கக் கூறின் இயேசுவின் உணவுத் தோழமை இறைவனின் உறவுத் தோழமையின் அடையாளமாக அமைந்தது. இயேசு பல்வேறு சூழல்கள், பல்வேறு இடங்களில் விருந்துண்டார். ஒவ்வொரு விருந்தும் ஒரு செய்தியை, ஓர் இறையாட்சி விழுமியத்தைப் பறைசாற்றும் செயலாக அமைந்தது.

பேதுருவின் மாமியாரைக் காய்ச்சலிலிருந்து குணமாக்கிய பிறகு, பேதுருவின் மாமியார் படைத்த விருந்தில் இயேசு பங்கு கொண்டார் (மாற் 1:29-31). இவ்விருந்து குணம் பெறும் ஒவ்வொருவரும் சமூகத்திற்குப் பயன் பெறுபவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. லேவியின் வீட்டில் இயேசு விருந்து உட்கொண்டார் (மத் 9:10-13). நீதிமான்களை அன்று, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்ற இயேசுவின் கூற்றை இவ்விருந்து மெய்ப்பிக்கிறது. புறவினத்தாரிடையே இறைவன் கொள்ளும் உறவின் அடையாளமாக லேவியின் வீட்டில் இயேசுவின் விருந்து அமைகிறது.

பரிசேயரான சீமோன் வீட்டில் இயேசு அருந்திய விருந்து (லூக் 1:6-50) உள்ளார்ந்த மன மாற்றத்திற்கான அழைப்பாக அமைகிறது. மார்த்தா - மரியா வீட்டில் இயேசு கொண்ட விருந்து (லூக் 10:38-42) பெண்களுக்கு சமூகத்தில் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும், முன்னுரிமையையும் சுட்டிக் காட்டுகிறது. இதேபோன்று சக்கேயு வீட்டில் இயேசு கொண்ட உணவு (19:1-10) மீட்பு எத்தகைய வீட்டிற்கு எத்தகைய சூழலில் வரும் என்பதைச் சொல்லுகிறது. இயேசுவின் உலக வாழ்வில் மட்டுமன்று, இயேசுவின் உயிர்ப்பிலும் இயேசுவின் உணவுத் தோழமையே (லூக் 24:13-35, 36-43, மாற் 14:14, யோவான் 21:9-14) உயிர்ப்புச் செய்தியாக மாறுகிறது.

### வாழ்வு தரும் விருந்து

ஒத்தமை நற்செய்திகள் நற்கருணை நிறுவின வரலாற்றையும் (மாற் 14:22-25 மத் 26:26-29 லூக் 22:19-20), யோவான் நற்செய்தி (அதி 6) நற்கருணை இறையியலையும் தருகின்றன. அதேபோன்று பவுலடியார் (1கொரி 11:23-26) நற்கருணை ஏற்படுத்தியதைப் பற்றிப் பேசுகிறார். நற்கருணை பற்றிய எல்லா விவிலிய குறிப்புகளும் இரண்டு கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

1. நற்கருணை விருந்து: “இதை அனைவரும் வாங்கி உண்ணுங்கள்” என்று இயேசு மிகத் தெளிவாகத் தமது உடலையும், இரத்தத்தையும் உணவாக, விருந்தாக வழங்கியுள்ளார்.

2. இயேசுவினுடைய உடல் விருந்தாக வழங்கப்பட்டதற்குக் காரணம் அதனை உண்பவர்கள் பெறும் பயன். நாம் அனைவரும் மீட்படையும் பொருட்டு ஆண்டவர் இயேசு தம்மையே உணவாக, விருந்தாக வழங்கியுள்ளார். தான் தரும் உணவு முன்னோர் பாலைநிலத்தில் உண்ட உணவு போன்றன்று (யோவா 6:49) மாறாக, நிலை வாழ்வுக்கு இட்டுச் செல்லும் என்பதனை இயேசு தெளிவாகக்குறிப்பிடுகின்றார். “எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்” (யோவா 6:54).

### உறவு வாழ்வுக்கான அழைப்பு

இயேசுவின் திருவிருந்தில் பங்கு கொள்ளும் அனைவரும் இயேசுவோடு இணைகின்றனர். “எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” (யோவா 6:56). எனவே, நற்கருணை விருந்து இறை - மனித ஒன்றிப்பின் அடையாளம். நற்கருணையை உண்பவர்கள் இயேசுவோடும், மூவொரு கடவுளோடும் மிக நெருங்கிய உறவும், ஒன்றிப்பும் கொண்டுள்ளனர். இத்தகைய இறை - மனித ஒன்றிப்பு மனித ஒன்றிப்பாகவும் மாற நற்கருணை அழைப்பு விடுக்கிறது.

மனித - மனித ஒன்றிப்பு இன்றும் ஒரு கேள்வி யாகவே அமைகிறது. இறை - மனித ஒன்றிப்பிற்கும் சில தடைகள் உள்ளன. இறை நம்பிக்கை, தனிப்பட்ட வாழ்வொழுக்கம் ஆகியவை இறை-மனித ஒன்றிப்பிற்கான தடைகளை உடைத் தெறிய கூடியவை. இறை-மனித ஒன்றிப்பிற்கான தடைகளை உடைத்தெறிந்து வெற்றி கொள்பவர்கள் கூட, மனித-மனித ஒன்றிப்பிற்கான தடைகளைத் தகர்த்தெறியாமல் ஒன்றிப்பின் அருள் அடையாளமான நற்கருணை விருந்தில் பங்கேற்பது முரண்பாடு மட்டுமன்றி, எதிர் சாட்சியாகவும் அமைகி றது. சாதியம், நுகர்வுக் கலாசாரம், ஏற்றத் தாழ்வுகள் ஆகியவை உடைத்தெறியப்பட்டு நற்கருணை விருந்து சுட்டிக் காட்டும் சமத்துவம், சகோதரத்துவம், ஒன்றிப்பு ஆகிய இறையாட்சி விழுமியங்களை வாழ்வாக்கிட நற்கருணை விருந்து அழைப்பு விடுக்கிறது.

> இயேசுவின் திருவிருந்தில் பங்கு கொள்ளும் அனைவரும் இயேசுவோடு இணைகின்றனர். “எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” (யோவா 6:56).

# மாதமொன்றில் மறைந்த இரண்டு கத்தோலிக்க கூத்தாளுமைகள்

*போர்க் காலத்தினை விடவும் இக்காலம் அதிக மனிதவுயிர்களைக் காவு கொள்ளுகின்ற காலமாக மாறியுள்ளமை வேதனைக்குரியது. அதிலும் கலைஞர்களின் இழப்பானது எமது சமூகத்திற்கே மாபெரும் இழப்பாகும். காரணம் கலைஞன் உருவாக்கப்படுவதில்லை பிறக்கின்றான். என்று சொல்வார்கள் அதற்குக் காரணம் கலைத்திறன் என்பது ஒருவனுக்கு இயற்கையானது இறைவன் அளிக்கின்ற கொடையில் இருந்து உருவாகுவது. அதிலும் எமது மரபுவழிக்கலையான நாட்டுக் கூத்துக் கலையானது ஈழத்தமிழரின் கலாசார அடையாளமாக எமது தனித்துவமான சுதேசியத்தினைப் பிரதிபலிக்கின்ற கலைவடிவம். அத்தகைய கலை மரபைப் பேணிவந்த அண்ணாவிமார்களின் இழப்பு என்பது ஈடுசெய்ய முடியாத பேரிழப்புகளாகும். அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜாவின் இழப்பினைத் தொடர்ந்து, மற்றும் இரண்டு அண்ணாவிமாரின் இழப்பு அடுக்கடுக்காகக் கடந்த மாதம் இடம்பெற்றிருக்கின்றது.*

*கூத்துக்கலையானது பாரம்பரியமாகப் பேணப்படுகின்ற கலை. திடீரென ஒரு அண்ணாவியார் உருவாகி விடமுடியாது. நீண்டகாலமாக கூத்துமரபின் அந்தலைகளில் இருந்து பிற்பாட்டுப்பாடி, சாதாரண பாத்திரமாக நடித்து, பிரதான பாத்திரமாக நடித்து, உதவி அண்ணாவியாராகப் பணியாற்றி, கூத்துக்களை நெறிப்படுத்தத் தொடங்கும் படிப்படியான நீண்ட அனுபவங்களில் இருந்தே ஒருசமூகம் அங்கீகரிக்கும் அண்ணாவியர் உருவாகின்றனர். இன்றைய இளம் சமூகம் இக்கலைகளில் ஆர்வங் காட்டாத சூழலில் அத்தகைய மூத்த பரம்பரை தற்போது விடைபெற்றுக்கொண்டிருப்பது வேதனைக்குரியது, அது கூத்துமரபின் எதிர்காலம் பற்றிய மிகப்பெருங் கேள்வியை எழுப்புகின்றது. குருநகர் பிரதேசத்தில் அண்ணாவியார் என்ற பெயருடன் இருந்த இறுதி அண்ணாவியாராகிய கிறிஸ்தோப்பரின் மறைவு அதனைக் கோடி காட்டுகின்றது. அவ்வாறே பாஷையூர் அண்ணாவியார் முடியப்பு அருட்பிரகாசம் அவர்களின் மறைவும் மிகப்பெரிய வெளிகளைத் தோற்றிவித்திருக்கின்றன.*

**காவலூர் யோவான்**

## அண்ணாவியார் கிறகரி கிறிஸ்தோத்திரம் (கிறிஸ்தோப்பர்)



குருநகரில் 08.06.1949 இல் பிறந்த இவர் தனது 15ஆவது வயதில் குருநகர் நெய்தல் நாடக மன்றம் நடத்திய இதயக் குமுறல் நாடகத்தில் நடித்ததில் இருந்து கலைப்பணியை ஆரம்பித்தவர், பல நாடகங்களில் நடித்தார். 1974 ஆம் ஆண்டு இலங்கை வானொலிக்கெனத் தயாரிக்கப்பட்ட கிறிஸ்தவ நாடகத்தில் சக்கேயு பாத்திரத்தினை ஏற்று நடித்தார். தொடரந்து பல உரை நடை நாடகங்களிலும் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட 'பொன்மணி' திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு குருநகர் நெய்தல் நாடக மன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட 'கொலையின் விலை' என்ற நாட்டுக்கூத்தில் நடித்ததுடன் கூத்துத் துறையில் பிரவேசித்தார். தொடர்ந்து அண்ணாவியார்சாமிநாதனைத்தனதுகுருவாக கொண்டு கூத்துத் துறையில் முன்னேறினார். புரட்சித்துறவி, வீரமாதேவி, ஜெனோவா, போர்க்களம், செந்தூது, மலை மேற் கொலை, பண்டாரவன்னியன், தியாக இராகங்கள், நந்திவர்மன், மூவிராசாக்கள் போன்ற குருநகர் நெய்தல் நாடக மன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட 12 கூத்துக்களில் நடித்துள்ளார் பல கூத்துக்களில் ராஜபாட் நடிகனாக கதாநாயகனாக நடித்தார். உயர்ந்த தோற்றமும் கம்பீரமான குரல் வளமும் கொண்ட இவர் ராஜபாட் நடிகனாகப் பலராலும் புகழப்பட்டார்

நடிகனாக இருந்த இவர் தொண்ணூறுகளில் செந்தூது நாட்டுக்கூத்தினை நெறிப்படுத்திய போது அண்ணாவியாராக பிரகடனப்படுத்தப்பட்டு, கூத்துக்களை நெறிப்படுத்தும் பணியை ஆரம்பித்தார். மலைமேற் கொலை, புரட்சித்துறவி, படைவெட்டு, செந்தூது, நந்திவர்மன், பண்டார வன்னியன், அரிச்சந்திரா, சங்கிலியன் போன்ற பல கூத்துக்களை நெறியாள்கை செய்தார். இடப்பெயர்வுக் காலத்திலும் நாச்சிக்குடாவில் வாழ்ந்த போது அங்கும் கூத்துக்களைப் பயிற்றுவித்து அம் மக்களால் பொன்னாடை போர்த்திப் பாராட்டப் பெற்றார். இடப்பெயர்வின் பின்னர் இங்கு வந்து குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தினை புனரமைப்புச் செய்து அதன் பொன்விழாவினைச் சிறப்பாக நடத்தினார். பண்டார வன்னியன் என்ற நாட்டுக் கூத்தினை 'ஆளுமை' என்ற பெயரில் வெளிப்புறக் காட்சிகளுடன் பரீட்சார்த்தமான வீடியோத் திரைப்படமாகத் தயாரித்து அதில் கதாநாயகனாகவும் நடித்தார். 2010 ஆம் ஆண்டில் ரூபவாகினிக் கூட்டுத்தாபன அனுசரணையில் சங்கிலியன் நாட்டுக்கூத்தினைத் தயாரித்து யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி அனுராதபுரம் கொழும்பு அம்பாந்தோட்டை போன்ற இடங்களிலும் கொண்டு சென்று மேடையேற்றினார்.

நாட்டுக் கூத்துக் கலைஞனாக இருந்தது மட்டுமன்றி கிராமத்தினதும், ஆலயம் சார்ந்த பல்வேறு பொதுப்பணிகளிலும், பக்தி முயற்சிகளிலும் மிகவும் ஆர்வமாக செயற்பட்டு வந்தார். குறிப்பாக பாஸ்காக் காலத்தில் குருநகர் யாகப்பர் ஆலயத்தில் நடைபெறுகின்ற இயேசுவை அறைந்து இறக்குகின்ற பாஸ்கு நிகழ்வில் பசாம் பாடல்களைப் பாடுவதிலும் அதன் ஆசந்தி செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டார். பசாம் பாடல்களையும் உத்தம மனஸ்தாப மந்திரத்தினையும் 'உதிரத்து இராகங்கள்' என்ற பெயரில் தானே பாடி ஒலிப்பேழையாக வெளியீடு செய்திருந்தார். தவக்காலத்தில் அவ் ஒலிப்பேழை பலரது வீடுகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

கலைஞனாக மட்டுமன்றி குருநகர் மண்ணின் பல்வேறு சமூக சேவைகளையும் முன்னின்று ஆற்றிய சமூகத் தொண்டனாகவும் திகழ்ந்தார். குருநகர் புனித யாகப்பர் ஆலய நிர்வாக சபையிலே மிக நீண்டகாலமாக அங்கத்துவம் வகித்தது மட்டுமன்றி ஆலயக் கட்டுமானப் பணிகளையெல்லாம் முன்னின்று ஆற்றிய இவர் குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் தலைவராக இருந்து கூத்து வளர்ச்சிக்கும் உதவினார். அதுமட்டுமன்றி யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையிலும் அங்கத்துவம் வகித்து பல்வேறு கலைச்செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளித்தார். இவரது கலைச்சேவைக்காக "மரபுக்கலைச்சுடர்", "கலைத்திலகம்", "கலாபூஷணம்", "சமூகத் திலகம்", "யாழ் ரத்னா", "கலைக்குரிசில்" போன்ற விருதுகள் வழங்கப்பெற்று மதிப்பளிக்கப்பட்டார்.

24.07.2021 இல் கொரோனாவுக்குப் பலியாகிய இவரின் மரணம் தந்த சோகத்திற்கு அப்பால், இவருடன் குருநகர் மண்ணின் அண்ணாவி பரம்பரை இல்லாது போனது மிகவும் வேதனைக்குரிய நிலையாகும்.

## அண்ணாவியார் முடியப்பு அருட்பிரகாசம்



கூத்துக்கலைக்குச்சான்று பகரும் மற்றொரு பிரதேசமாக பாஷையூர்க் கிராமம் திகழ்கின்றது. இக்கிராமத்தில் 1944 ஆம் ஆண்டு ஐப்பசி 07 ஆம் திகதி பிறந்து வளர்ந்து தனது எட்டு வயதில் ஞானசௌந்தரி நாட்டுக்கூத்திலே நடித்ததனூடாகக் கலையுலகில் அறிமுகமாகியவர் அட்பிரகாசம் அவர்கள்.

சிறியவயதில் இருந்தே பல கூத்துக்களிலும் நாடகங்களிலும் நடித்து வந்த இவர் தமக்கு முற்பட்ட அண்ணாவிமார்களான பஸ்தியாம்பிள்ளை, அந்தோனி, நேசத்துரை, துரைசாமி, அல்பிரட், பாக்கியன், பிலிப்பையா போன்ற பல நெறியாளர்களின் கீழ் நடித்து செப்பனிடப்பட்டு அண்ணாவியார் நிலைக்கு உயர்ந்தவர். பல நாடகங்களையும் நாட்டுக் கூத்துக்களையும் தொடர்ச்சியாக நெறிப்படுத்தி வந்தவர் அது மட்டுமன்றி தனது உடமைகளை முதலாக விற்று நாடகங்களை மேடையேற்றியவர். கூத்தின் வளர்ச்சிக்காக ஏறத்தாழ 68 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பங்காற்றியவர்.

படைவெட்டு, ஜெயசீலன், மனோகரா, யோசப்வாஸ், சற்குணநாதன், இலங்கேஸ்வரன், சங்கிலியன், குருதியில் மலர்ந்த அன்புமறை, சம்மிக்கேல், புலவனுக்குத்தலையீந்தபுரவலன், தேவசகாயம் பிள்ளை, பண்டாரவன்னியன், விடுதலைப் பயணம், எனப் பலகூத்துக்களில் கதாநாயகனாகவும் பிரதான பாத்திரங்களையும் ஏற்று நடித்த இவரின் கனிவான தொனியும் கச்சிதமான நடிப்பும் பலராலும் பாராட்டப்பெற்றன. உரையாடல்களை சிறப்பான உணர்வுடனும் நடிப்புடனும் முன்வைக்கும்திறன்கொண்ட இவரது நடிப்புத்திறன் பலரையும் கவர்ந்து நின்றது.

கூத்திலே நடித்து அதனை நெறிப்படுத்தும் ஆற்றல்களைப் படிப்படியாகப் பெற்ற இவர் கூத்துக்களை எழுதுகின்ற ஆளுமையாகவும் மாறினார். சம்மிக்கேல், மண்ணின் மைந்தர்கள், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, முற்றுகையை முறியடிப்போம், விடியலைத்தேடும் பறவைகள், விசுவாசத்தின் வெற்றி, குருதியில் மலர்ந்த அன்புமறை, புலவனுக்குத் தலை ஈந்த புரவலன், அன்பு மறை, போர் முடித்து ஊர் போவோம், தியாக தீபங்கள், அரிச்சந்திரா, இவரே உலகின் ஒளி, விடுதலைப்பயணம், தியாக இராகங்கள், நாவழியா நாயகன், மண்ணின் மைந்தர்கள், பண்டாரவன்னியன் போன்ற 22 கூத்துக்களை எழுதி நெறிப்படுத்தியுள்ளார். கத்தோலிக்க கூத்து இலக்கியத்திற்கு சான்று பகரும் இக்கூத்துக்களை யாத்த இவர் பலதை நூல்களாகவும் வெளியீடு செய்துள்ளார். மண்ணின் மைந்தர்கள், விடுதலைப்பயணம், மாவீரன் சங்கிலியன், போன்ற கூத்துக்களை நூலாகவும் வெளிக்கொணர்ந்தார். அதனை விட இந்த வருடம் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவரது அரிச்சந்திரா, நாவழியா நாயகன், இவரே உலகின் ஒளி, வெடியரசன், பண்டாரவன்னியன், கூத்திசை நாடகம், இலங்கை வேந்தன், இராவணேசன், சிலம்பரசி ஆகிய 7 கூத்துக்களை மூன்று நூற் தொகுதிகளாக வெளியீடு செய்தது.

இவர் இடம்பெயர்ந்து நாச்சிக்குடாவில் வாழந்தபோதும் இடப்பெயர்வின் அவலத்தினை ஆற்றுப்படுத்தும் முகமாக மோயீசனின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப்பயணம் நாட்டுக்கூத்தினை எழுதி நெறிப்படுத்தி அங்கு குமுழமுனைப்பங்கு இளைஞருக்குபயிற்று வித்து பிரமாண்டமான படைப்பாக்கி வெற்றி கண்டார். அதுமட்டுமன்றி முள்ளியவளை மன்னார் பிரதேசங்களிலும் கூத்துக்களைப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளிலும், பங்குகளிலும் கூத்துக்களைப் பயிற்றுவித்த இவர் கூத்துக்கலையை எதிர்கால சந்ததிக்கு வழங்கவேண்டுமென்ற பேரவாவுடன் வாழ்ந்தவர். பாசையூரில்அருள்நாடகமன்றம், பதுவையர் கலாமன்றம் என்ற அமைப்புக்களை உருவாக்கி அதற்கூடாகக் கூத்துக்களைத் தாயாரித்து மேடையேற்றினார்.

இவர் எழுதிய கூத்துக்கள் வெறு மனேகதையைச்சொல்வனவாக இல்லாது தேவபக்தியை, தேசப்பற்றினை, சமூகப் பிரக்ஞையுடன் சொல்கின்ற வடிவங்களாகக் காணப்பட்டன. அதனால் இவரது கூத்து நூல்கள் பல இலக்கிய விருதுகளை யும் பெற்றுள்ளன. நாடகம், நாட்டுக் கூத்துக்களுடன் மட்டும் நில்லாது தனது கவித்திறனால் இரண்டு காவியங்களையும் யாத்து வெளியீடு செய்துள்ளார். 'புனித அந்தோனியார் காவியம்' 'பண்டார வன்னியன்' ஆகிய இவரது இரண்டு காவியங்களும் அவர் தனது இரண்டு கண்களாகக் கொண்டிருந்த தேவ பக்தியினதும், தேச பக்தியினதும் அடையாளங்களாகத் திகழ்கின்றன. எளிமையான சந்தமும், மொழிச் சிறப்பும், பொருட்செறிவும் வாய்ந்த இவரது படைப்புக்கள் யாவும் இவரது கவித்துவத்துக்கு சான்று பகர்வதுடன் காலங்கடந்தும் வாழும் இலக்கியங்களாக எஞ்சி நிற்கின்றன.

இவரது கலைப்பணிக்காக மரபுக் கலைச்சுடர், யாழ் ரத்னா, கலாபூசணம், போன்ற உயர்விருதுகள் மட்டுமன்றி முதலமைச்சர் விருது, தமிழியல் விருது போன்றவையும் கிடைக்கப்பெற்றன. மொத்தத்தில் நடிகனாக, நெறியாளனாக, நாடக தயாரிப்பாளனாக, எழுத்தாளனாக பன்முகத்தன்மையான திறன்களைக் கொண்டிருந்த இவர் வறுமையில் வாழ்ந்தாலும் தன் வாழ்நாள் முழுவதையும் கலைச் சேவையாக்கி இறைவன் தனக்குத் தந்த தாலந்துகளைப் பலவாறாகப் பெருக்கிச்சமர்ப்பித்துச்சென்றிருக்கின்றார். அமரர் 29.07.2021 அன்று அவர் மறைந்து விட்டார் என்பது சாதாரணமான விடய மல்ல. அது மிகப்பெரிய இட்டு நிரப்ப முடியாத இடைவெளி.

இடர்மிகுந்த இந்தக் காலம், இத்தகைய பெறுமதி வாய்ந்த மூத்த பரம்பரைகளை கொண்டு செல்கின்ற சோகத்திலும், எமது திருச்சபையும் சமூகமும் இவற்றிக்கு மாற்றாகப் புதிய இளம் சமூகத்தினை உருவாக்க வேண்டிய கடமையை இந்த இழப்புகளினூடாக உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றது.



# என் மக்களை வாழ விடு இல்லையேல் போக விடு

அருட்சகோ.வி.ஜெ.ஜேசுதாஸ்

இன்று என்ன தான் நடக்கிறது இலங்கையிலே? ஐ.நா இன்றும் இனப்படுகொலை பற்றிப் பேசிக் கொண்டே இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்றும் வீதியில் போராடிக்கொண்டே இருக்கிறார்கள். எதுவும் முடிந்தபாடில்லை. இது ஒருபுறமிருக்க மே 18 நினைவேந்தலுக்குத் தடை, நீதியைப் பேசுவோருக்கும் நீதிக்காய் பேசுவோருக்கும் எச்சரிக்கை, குறுந்துார் மலையில் சிங்களவர்களுக்குக் கொரோனா தொற்றுக்கு வாய்ப்பில்லை, ஆனால் முள்ளிவாய்க்காலில தமிழர்களுக்குக் கொரோனாத் தொற்றுக்கு வாய்ப்புக்கள் அமோகம், வடமாகாணத்திற்கு உள்ளே கொரோனா எனும் பெயரில் இராணுவ, பொலிசாரின் சோதனைச் சாவடிகளுக்குக் குறைவில்லை, ஆனால் வடமாகாணத்திற்கு வெளியே சோதனைச் சாவடிகளே இல்லை. இப்படியே போய்க்கொண்டிருக்கிறது நம் நாட்டு அரசியல்.

கடவுள் தலையிட வேண்டுமென்று சொன்னால் இந்த அரசின் பாதையிலும் கட்டாயம் தலையிட வேண்டும் அல்லவா? இன்றைய சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் கடவுளின் குரல் கட்டாயம் ஒலிக்க வேண்டும் அல்லவா? கடவுளின் தலையீடே இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் பார்வோனை எதிர்கொண்ட அதே வீரியத்தோடு இல்லை என்பதுவும் உண்மையே. ஏன்? எனும் கேள்வி கண்டிப்பாக எழ வேண்டும். இஸ்ரயேல் இனத்தின் மீது கடவுளுக்கு இருந்த அன்பு ஈழத்தமிழினத்தின் மீது கடவுளுக்கு இல்லையா? அல்லது சிங்கள அரசின் பலம் பார்வோனை விடப் பலமடங்கு பெரியதா? எனக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இப்பொழுது விடை தேட வேண்டியது கடவுளிடமல்ல. விடை மோசே மற்றும் ஆரோனிடமே உள்ளது. அன்று எகிப்திய அரசின் அநீதிகளைக் கண்டு கோபம் கொண்டு. தன் மக்கள் சார்பாக பார்வோனை எதிர்கொண்ட அதே கடவுள் இன்று நடக்கும் அநீதிகளையும் காண்கின்றார். கோபம் கொள்கின்றார். ஆனால் இன்று அரசின் அவைக்குச் செல்ல, கடவுளின் கோபத்தை, விருப்பத்தை, பலத்தை அவர்களின் முன்பாக நின்று சொல்ல மோசேயும் ஆரோனும் தான் இல்லை. கடவுள் இருக்கிறார் மனிதர்கள் தாம் இல்லை.

மனிதர்களின் “சுதந்திரம்” என்பது கடவுளின் சுதந்திரத்தைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளவே செய்கின்றது. எமக்குக் கடவுளிடமிருந்து ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும், மறுக்கவும் சுதந்திரமிருப்பதால் கடவுள் எம்மீது எதையும் திணிப்பதில்லை. அன்றாட நிகழ்வுகள் வழியாக, மனிதர்கள் வழியாக, நமது எண்ணவோட்டத்தின் வழியாக நம்மோடு பேசுகிறார். பலருக்கு அவர் பேசும் போது தாம் கேட்பது கடவுளின் குரல் தான் எனும் தெளிவு ஏற்படுவதில்லை. இன்னும் சிலருக்கோ அது கடவுளின் குரல் தான் என்று தெரிந்தாலும் அதன்படி நடக்க, செயற்பட விருப்பம் இருப்பதில்லை. அல்லது துணிவு இருப்பதில்லை.

கடவுளின் குரலை அப்படிக் கேட்குமளவுக்கு பண்பட்ட இருவர் தாம் மோசேயும் ஆரோனும். பாலை நிலத்தில் ஒரு முட்புதர் எரிகிறது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்து போகவில்லை.(வி.ப 3:2) இது தான் மோசேயின் கவனத்தை ஈர்க்க கடவுள் கைக் கொண்ட வழி. பாலை நிலத்தில் முட்புதர் எரிவது ஒன்றும் அரிதானது அல்ல. அப்படி ஒரு முட்புதா் எரிகிறது. சாதாரணமாகப் பார்த்தால் அம்முட்புதா் ஒரு மனிதரின் கவனத்தை ஈர்க்க முடியாது. கூர்மையான பார்வை கொண்டவர்களால் மட்டுமே அந்த நெருப்பை ஊடுருவிப் பார்த்து அதற்குள்ளிருக்கும் புதர், கிளைகள் எரியவில்லை என்பதை உணர முடியும். மோசேயிடம் இத்தகைய கூரிய பார்வை இருந்தது. இன்று எரிகிற இம் முட்புதர் என்றும் எரிவதைப் போல இல்லையே, இதன் முட்புதர்கள் தீய்ந்து போகவில்லையே என உணர்ந்து நெருங்கிச் செல்கிறார். கடவுளின் குரலைக் கேட்கிறார். எபிரேயன் ஒருவனை எகிப்தியன் அடிப்பதுவும் சாதாரணமானதே. எபிரேயர்கள் அடங்கியே போக வேண்டியிருந்தது. கண்டவர்கள் கடந்தே போவார்கள். ஆனால் மோசேயால் அப்படிச் செல்ல முடியவில்லை. அடிக்கப்படுவது ஒரு எபிரேயனல்ல, ஒரு இனம் என்பதைப் பார்க்கின்றார். (வி.ப 2:11,12) கோபம் கொள்கிறார். இந்தப் பார்வையே தன்னை அணுகி வந்த கடவுளைக் காண உதவியது.

ஆரோனின் வாழ்வில் கடவுள் குறுக்கிட்ட முறை இன்னும் எளிமையானது. பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து எபிரேய மக்களை விடுவிக்க வேண்டும் எனக் கடவுள் விரும்புகிறார். தனது திட்டத்தை ஏற்று ஒத்துழைப்புத் தரும் மனிதர்களைத் தேடுகிறார். விடுதலைப் பயண நாட்களில் மோசேயல்ல, கடவுள் அழைத்த முதல் மனிதர். மோசே கடவுளைக் கண்ட முதல் மனிதர். இன்னும் பலரைக் கடவுள் அணுகிச் சென்றிருப்பார்., அழைத்திருப்பார், தோழமை நாடியிருப்பார், ஆனால் யாரும் செவிசாய்த்திருக்க மாட்டார்கள். மோசே செவி கொடுத்ததும் கடவுளின் பணி எளிதாகிறது. கடவுள் மோசே வழியாக ஆரோனிடம் பேசுகின்றார். மோசேயின் கண்கள் கூர்மையானவை என்றால் ஆரோனின் செவிகள் கூர்மையானவை. தன்னிடம் மோசே அனைத்து விடயங்களையும் கூறும் போது அது மோசேயின் குரல் அல்ல, கடவுளின் குரல் என்பதை உணர்கிறார்,(வி.ப 4:28) உடனுழைப்பாளர் ஆகின்றார்.

இன்றும் அநீதி இருக்கிறது. ஆண்டவரும் இருக்கிறார். அவரோடு உழைக்க உடனுழைப்பாளர்கள் தாம் இல்லை. அணை நிரம்ப வெள்ளமிருக்கிறது, அது கடவுளின் பிரசன்னம். காய்ந்து போன வயல் வெளியும் இருக்கிறது, அது அநீதியின் தடம். அணையையும் வயல்வெளியையும் இணைக்கும் ஆறுகள் தாம் இல்லை. அது கடவுளோடு கை கோர்த்து உழைக்கும் மனிதர்களின் பற்றாக்குறை.

# யாழ்ப்பான மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**1862ம் ஆண்டு யாழ் திருத்தூது மாவட்டப் புள்ளிவிபரங்கள்**
**(1863ம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்ட கத்தோலிக்க சமயப் புள்ளி விபரக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டது.)**
**பேரருட்திரு. ஸ்ரீபன் செமேரியா, யாழ்திருத்தூது மாவட்ட ஆயர்**

| மறைத்தளம் | அருட்பணியாளர் | கத்தோலிக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 4) மன்னார் | ஜே. லெலோன்ஸ் (J. LeLons)<br>ஏ. லக்லோ - பூசாக்<br>(A. Laclau – Pussacq) | 5,400 |

மன்னார்த்தீவிலுள்ள மொத்த சனத்தொகை 10,000. பிறமதத்தவர் (இந்துக்கள் 300, புரட்டஸ்தாந்து சபையினர் 100, கோவா பிரிவினைவாதிகள் 150, முகமதியர் 3,850). இங்கு கோவா பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் ஒரு ஆலயம் (பள்ளி முனை) உள்ளது. பிரதான நிலப்பரப்பில் உள்ள விடத்தல்தீவும் இம்மறைத்தளத்திற்குச் சேர்ந்தது.

| | | |
|---|---|---|
| 5) மாதோட்டம் | பி. கூர்டன் (B. Gourdon) | 4,200 |

இங்கு 450 கோவா பிரிவினைவாதிகளும் ஒரு பிரிவினைவாதக்குருவும் உள்ளனர். இவர்களது கட்டுப்பாட்டில் 12 பிரிவினை ஆலயங்களும் சிற்றாலயங் களும் உள்ளன. 1859ல் 250 பிரிவினைவாதிகள் தாய்த் திருஅவையுடன் இணைந்து கொண்டனர். இன்னும் சிலர் வந்துகொண்டிருக்கின்றனர். இங்கு மிகச்சில பிறசமயத்தவர்களேயுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 6) கல்பிட்டி | ஈ. குயீடி (E. Guidi)<br>எஸ். வடூலிசன் (S. Vadoolison) | 3,193 |

இங்கு முகமதியர்கள் பெருமளவில் வாழ்கின்றனர். இந்த மாவட்டத்தில்தான் புகழ்பெற்ற புனித அன்னாள் யாத்திரைத்தலம் (தலைவில்லு) உள்ளது. இலங்கை முழுவதிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் இவ்விடத்திற்குயாத்திரிகர்கள் வருவர்.

| | | |
|---|---|---|
| 7) சிலாபம் | எவ். ஒருணா (F. Oruna) | 5,700 |

ஒருணா அடிகளின் அயரா உழைப்பினால் கட்டப்பட்ட சிறப்பானதொரு ஆலயம் இங்கு மிக அழகானதாக மிளிர்கின்றது. இங்கு 17 மாணவர்களைக்கொண்ட ஒரு ஆங்கிலப்பாடசாலையும் 69 மாணவர்களைக்கொண்ட ஒரு சுதேச மொழி (தமிழ்) பாடசாலையும் உள்ளன.

| | | |
|---|---|---|
| 8) கம்மல, வென்னப்புவ | எவ். கார்சியா (F. Garcia)<br>ஜே. லெபெஸ்கோ (J. Le Bescou)<br>சி. சோர்ணவெல் (C. Chournavel) | 9,500 |

இங்கு வதிவிடத்திருப்பணியாளர் அண்மையில் மூன்று அழகிய ஆலயங்களைக் கட்டியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 9) குருணாகல் | எவ். சேவியர் (F. Xavier) | 714 |

இங்கு ஒரு ஆலயம் மட்டுமேயுள்ளது. இந்த மாவட்டம் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இங்குள்ள பௌத்த பெரும் பான்மையினர் கத்தோலிக்கர் மட்டில் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 10) பருத்தித்துறை | எல். பெல்லிசியர் (L. Pellissier) | 3,746 |

பருத்தித்துறை யாழ்ப்பாணத்திலிருந்து 21 மைல் தொலைவிலுள்ளது. இம் மறைத்தளத்திலுள்ள கரவெட்டியில் கோவா பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் ஒரு சிற்றாலயம் உள்ளது. இங்கு ஒரு வதிவிடப்பிரிவினைக்குரு இல்லாவிடினும் 149 பிரிவினைக் கிறிஸ்தவர்கள் உள்ளனர். இந்தமறைத்தளம் வடமராட்சி,தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு ஆகியமாவட்டங்களை உள்ளடக்கியுள்ளதாயுள்ளது.

| | | |
|---|---|---|
| 11) மட்டக்கிளப்பு | ஜே. லெக்கான் (J. Le Can)<br>ஏ. றூவ்வியாக் (A. Rouffiac) | 1,992 |

இங்கு ஒரு நல்ல ஆங்கிலப்பாடசாலை உள்ளது. இரண்டு சுதேச (தமிழ்) மொழிப்பாடசாலைகள் உள்ளன. இங்கு 96 மாணவர்கள் பயில்கின்றனர். புரட்டஸ்தாந்து சபையினர் 200 பேர் உள்ளனர். இந்துக்கள், முகமதியர்கள், பௌத்தர்கள் மற்றும் வேடுவர்கள் 72,901 பேர் உள்ளனர்.

| | | |
|---|---|---|
| 12) திருகோணமலை | எல். கீற்றிங் (L. Keating)<br>எவ். குறே (F. Gouret) | 1,660 |

இங்கு ஒரு சிறிய அழகிய ஆலயம் உண்டு. போர்வீரர்களுக்கொன்றும், மேலும் இரண்டுமாக 3 பக்திச்சபைகள் உள்ளன. 200 பேரளவில் புரட்டஸ்தாந்து சபையினர் உள்ளனர். இந்துக்கள், முகமதியர்கள் 13,000 பேர் உள்ளனர்.

(தொடரும்....)

அருட்பணி S.V.B. மங்களராஜா

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

## அருட்பணி செ. அன்புராசா

(ஜஸ்மின், மன்னார்)
**கேள்வி: கொரோனா மிக வேகமாகப் பரவிப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி வரும் சூழலில் மக்கள் தங்கள் பாதுகாப்புப் பற்றிக் கவலை கொள்வதாகத் தெரியவில்லையே! ஏன்?**
**ப:** ஜஸ்மின், உண்மையில் பெரும்பாலான மக்கள் கொரோனாக் கிருமி பரவுவதை மறந்துவிட்டார்கள். ஆனால், கொரோனாக் கிருமி மனிதர்களை இன்னும் மறக்கவில்லை! ஆகவே, நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் மற்றவர்கள் பாதிக்கப்படாதிருக்க நாம் நோய்க்கிருமிக் காவிகளாக ஆகாதிருப்பதும் இக்காலத்தில் நாம் செய்யக்கூடிய மேலான பணி. நோயிலிருந்து சுகம்பெறுவதைவிட நோய்த் தடுப்பே சிறந்தது. ஆகவேதான், வெள்ளம் வரும்முன்னே அணைகட்ட வேண்டும் என்றார்கள் நம் முன்னோர்கள்.

*(சில்வா, மன்னார்)*
**கே: கதிரையில் ஏறியதும் சிலரைக் கையில் பிடிக்க முடியாதிருக்கின்றதே! ஏன்?**
**ப:** சில்வா, கதிரைகள் நிரந்தரமானவை. அதில் இருப்பவர்கள் தற்காலிகமானவர்கள். சிக்கல் என்னவென்றால், அதில் ஆசைப்பட்டோ அல்லது ஆசைப்படாமலோ ஏறி இருப்பவர்கள் தாம் தற்காலிகமானவர்கள் என்பதை நிரந்தரமாக மறந்து விடுகின்றார்கள்! அதனால்தான், அவர்களைக் கையில் பிடிக்க முடியாதிருக்கின்றது!

*(மேரி, யாழ்ப்பாணம்)*
**கே: கொரோனாக் காலத்தில் என்ன செய்வதென்று தெரியாது நாங்கள் இருந்த போது நீங்கள் ஒரு நூலை எழுதி முடித்திருப்பதாக அறிந்தேன். பாராட்டுக்கள். அதுபற்றிச் சொல்லமுடியுமா?**
**ப:** மேரி, நீங்கள் அறிந்த தகவல் உண்மைதான். அந்நூலின் பெயர் 'கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும்'. கடந்தாண்டு கொரோனா பரவிய காலத்தில் மூன்று கிழமைகள் தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அக்காலத்தில் இயற்கையோடு உறவாடக் கொஞ்சம் நேரம் கிடைத்தது. அவ்வனுபவத்தில் பிறந்ததுதான் அந்நூல். பிற உயிர்கள் நமது - மனித நடவடிக்கைகளைப் பற்றிய அவதானிப்புத்தான்அது! படித்துப் பாருங்கள். பிடிக்கும், இடையிடையே கடிக்கும் என நம்புகின்றேன்.

*(மலர், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: 'கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும்' என்ற உங்களுடைய நூலைப்பற்றிக் கேள்விப்பட்டேன். வித்தியாசமான தலைப்பாக இருக்கின்றது. நூல். சுவாரசியமாக இருக்கும்போல் தெரிகின்றது. விடயம் என்னவோ!?**
**ப:** மலர், நூலை முதலில் வாங்குங்கள், பின்னர் படித்துப் பாருங்கள். அப்போதுதான் அதன் சுவாரசியம் உங்களுக்கு விளங்கும்.

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: 'என் கேள்விக்கென்ன பதில்' களால் கலாக்கிறீர்கள்! எப்படித் தங்களால் முடிகின்றது?**
**ப:** முடிவதால், முடிகிறது! தொடர், முடியாததால் முடிகிறது!

(ஆனந்தன், கிளிநொச்சி)
**கே: நாட்டில் கொரோனாப் பரவல் ஒருபுறமிருக்க ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் அதிகமாக நடந்துகொண்டிருப்பதன் காரணம் என்னவோ?**
**ப:** ஆனந்தன், அரக்கத்தனம் அதிகரிக்கும்போது இரக்கக்குணம் இல்லாமல் போகும்! அராஜகம் தலையெடுக்க ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்கும்!

(பிரியா, யாழ்ப்பாணம்)
**கே: கொரோனாத் தடுப்பூசியை போட்டுக்கொள்வதாக நான் இன்னும் தீர்மானிக்கவில்லை! நீங்கள் போட்டுவிட்டீர்களா? இதனைப் போட்டுக்கொள்வதால் நன்மை உண்டென்று நீங்கள் கருதுகின்றீர்களா?**
**ப:** உங்கள் கேள்விகளைப் பார்க்கும்போது தடுப்பூசியை ஏற்றுவதில்லை என்பதில், நீங்கள் குறியாய் இருப்பது போல் தெரிகின்றது! நிற்க, இத்தொற்று ஏற்பட்டு இத்தனை இலட்சக்கணக்கானவர்கள் இறந்து போக இருப்பவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற உன்னத நோக்கோடு எத்தனையோ ஆயிரம் ஆய்வாளர்களும் விஞ்ஞானிகளும் மருத்துவ நிபுணர்களும் இரவு பகலாகக் கண்விழித்து, பல தியாகங்கள் செய்து, உழைத்த உழைப்பின் விளைவே இத்தடுப்பு மருந்து! இதன் பின்னரும் நீங்கள் இத்தடுப்பூசியை ஏற்றுவதும் ஏற்றாமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது. நான் தடுப்பூசியை எடுத்துக்கொண்டேன்.

(ஜெயந்தன், மன்னார்)
**கே: நீங்கள் படித்த, உங்களுக்குப் பிடித்த ஒரு சிந்தனையைப் பகிர்வீர்களா?**
**ப:** ஜெயந்தன், நிறைய இருக்கின்றது. ஒன்றைச் சொல்கின்றேன். 'தனிமையில் இருப்பவரைப் பைத்தியம் எனச் சொன்ன உலகம்தான் இன்று தனிமையில் இருப்பதையே வைத்தியம்' என்கின்றது.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

---

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

06

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*



### அத்தியாயம் 2

திரு அவைகள் அனைத்து மதங்களைப்போலும், இறை வனையே தொடக்கமாகவும் முடிவுமாகக் கெண்டு, மற்றைய மதங்கள் மத்தியில் பயணம் செய்கின்றன. தமிழ்த் திரு அவைகள் தமது சூழலுக்கேற்ப நற்செய்தியைப் போதித்து அதன் விழுமியங்களைச் சமுதாயத்தில் நிலை நாட்டுவதே எமது தலையான கடன்.

### அத்தியாயம் 3

கிறித்தவம் கத்தோலிக்க திரு அவையாக வளர்ந்தது. பிரிவினைகள், திருதெந்தீன் சங்கத்தின் பின் ஐரோப்பிய மறைபரப்பாளர்

**3.1 இயேசு பரலோகம் திரும்பிய பின், சீடர்கள் ஆவியினால் தூண்டப்பட்டு, குழுமங்களை ஆரம்பித்தனர்.**

இயேசுக்கிறிஸ்துவின் விண்ணேற்றத்திற்குப் பின், ஆவியினால் ஏவப்பட்ட சீடர்களின் தலைமையில், புதுமைச் செயல்களிலும் விசுவாசம் கொண்ட சிறு குழுமங்களாகத் தோன்றி வளர்ந்தன. தங்கள் நம்பிக்கையை அடித்தளமாக்கி, கிறிஸ்துவின் செயல்களையும் போதனைகளையும் நினைவுபடுத்தி அவர் தம் நினைவாக விட்டுச்சென்ற திருவிருந்தையும் நிறைவேற்றினர்.

தாம் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்தவைக ளையும் நம்பி, மற்றவர்களும் அவற்றை நம்பி வாழ ஒருவரை ஒருவர் ஊக்குவித்தனர். தலைவர்கள் அவற்றை வார்த்தையினாலும், வாழ்வினாலும், கடிதங்களாலும் பகிர்ந்து யூதேயாவிலும் அயல் நாடுகளிலும் கிறிஸ்தவ குழுமங்களை ஏற்படுத்தினர்.

அப்போஸ்தலரும் தலைவர்களும் நடந்தவற்றை மக்களுக்குத் தங்களுடைய மொழியிலே பகுத்தறிவுடன் விளக்கி பகிர்ந்து கொடுத்தார்கள். பழைய ஏற்பாடு வரலாற்றை நினைவுபடுத்தி, இயேசுவே மனித மீட்பிற்காக எதிர்பார்க்கப்பட்ட இரட்சகர்- மெசியா என்று போதித்தனர்.

சீமோன் பேதுரு, ஒரு யூதன் மீன் பிடிப்பவர் அரமேய மொழி மாத்திரம் தெரிந்தவர். இருந்தும், இயேசுவினால் சீடர்களின் பேச்சாளனாக இருந்தார் செயற்பட்டார் என்றும் தமது விசுவாசத்தையும் எதிர்பார்ப்பையும் துணிவாக வெளிப்படுத்தினார் என்பதும் தெளிவாக இருக்கின்றது. அவர் ஒரு கணம் தமது மனித பெல வீனத்தில் இயேசுவை மறுதலித்தாலும், இயேசு அவரிடமே வருங்காலப் பொறுப்பையும் தலைமைத்துவத்தையும் ஒப்படைத்தார் என்பது தெளிவாக இருக்கின்றது.

மாறாக, புனித சின்னப்பர், கல்விகற்றவர் பரிசேய மொழிகள் தெரிந்தவர், உரோமையின் பிரசை. அவர் கிறிஸ்துவின் துணிவான சாட்சியும் போதகருமானதால், கைது செய்யப்பட்டு உரோமைக்கு, உரோமை அதிகாரிகளினால் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து அவர் எழுதிய கடிதங்கள் இவைகளை நிரூபிக்கின்றன.

புனித சின்னப்பர் பர்னபாஸ் போன்றவர்களின் பயணங்களும் கடிதங்களும், எமக்கு எப்படி யூதேயாவின் அயல் நாடுகளுக்கு கிறிஸ்தவ குழுமங்கள் பரவின என்பதைக் காட்டுகின்றன.

ஆரம்ப காலச் சீடர்களும் திரு அவைத் தலைவர்களுமான யூதர்கள் இயேசு பேசிய அரமைக் மொழி தெரிந்தவர்கள். ஆனால் தமது நம்பிக்கையை மக்களுடன் பகிர்ந்துகொள்ள பயணங்களும் போதனைகளும் நடாத்தினர். அயல் நாடுகளுக்கு நற்செய்தியைப் பரப்புவதில் அந்நியமொழிகளில்வார்த்தையும், சிந்தனையும், வளர்ச்சி அடைவது ஒன்றாக நடைபெற்றது.

**3.2 பெந்தக்கோஸ்தும் அப்போஸ்தலரின் முதல் ஜெருசலேம் சங்கமும் கிறிஸ்தவத்தைப் பிற இனத்தாருக்கும் மீட்பின் பாதையைத் திறந்தன.**

கிறிஸ்தவத்தின் யூத ஊற்றின் காரணத்தால், யூத இயேசுவைப் பின்பற்றிச் சீடர்களாக விரும்பியவர்கள் மீது விருத்தசேதனம் கட்டாயமான நிபந்தனையாகத் திணிக்கப்பட்டது.
ஆனால் இரு நிகழ்வுகள் அதை முழு உலகத்திற்கும் உரிய மதமாக மாற்றியிருக்கின்றன.
1) பரிசுத்த ஆவியின் பொழிவிலே, ஜெருசலேமுக்கு வந்திருந்த யூதரல்லாதவரும் அப்போஸ்தலர்கள் பேசியதைத் தமது மொழியில் புரிந்துகொண்டனர்.
2) கி.பி. 49ம் ஆண்டின் முதல் சங்கத்தில் இயேசுவின் சீடர்கள், புனித பவுல் அடியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, யூதரல்லாதவர்கள்மேல் விருத்தசேதனம் திணிப்பதில்லை என்று எடுத்த முடிவு.

மூவொரு இறைவனின் நாமத்தில் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்துவின் சீடராகும் அனைவரும் அவரின் இரட்சணியத்தைப் பெறுவா் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் புனித பவுலடியாரின் முயற்சியால் பிற இனத்தவரும் இயேசு இரட்சகரை விருத்தசேசனமின்றி ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்காக, 49ம் ஆண்டில் ஜெருசலேமில் நடந்த முதல் அப்போஸ்தலர் கூட்டத்தில் பிற மதத்தாரையும் யூத விருத்தசேதனம் இன்றித் திருமுழுக்கினால் சீடராக்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இது கிறிஸ்தவத்தை யூத உலகிற்கு அப்பால், பிற இனத்தவர்க்கும் உரியதாக ஆக்கியது. (Christianity became a universal religion) அப்போஸ்தலர், யூத, புறவின சீடர்களுக்கு எழுதிய கடிதங்களும் 4 நற்செய்தி ஏடுகளுடன் இணைந்து, இக் கிறிஸ்தவத்தின் அடி அத்திவாரமாகத் திகழுகின்றன.

இதனால் பிற மதங்களின் பொருளையும் முக்கியத்துவத்தையும் குறைக்கவோ, அல்லது கிறிஸ்தவத்தைப் பிற மதங்கள் அனைத்திற்கும் மேலானது எனக் கருதுவதாகவோ அல்ல! ஆனல் கிறிஸ்தவம், யூத இன எல்லைகளைக் கடந்து, பிற இன மக்கள் மத்தியிலும் இயேசுவின் சீடர்களைக் கொண்டிருக்கவும், பிற மதங்கள் மத்தியிலும் இயேசுவின் ஒளியாகவும் உப்பாகவும் செயற்படும் தன்மையையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

**3.3 உரோமையை அடைந்த கிறிஸ்தவம் முதலில் துன்பத்திற்கு உள்ளானது, ஆனால் பின்பு ஏற்றுக்கொள்ளப் பட்டது.**

ஜெருசலேமில் பெந்தக்கோஸ்து விழா நடைபெற்ற பொழுது, உரோமையிலிருந்து வந்த சிலர் அங்கிருந்தனர் என்றும், அவர்கள் ஊடாகவே கிறிஸ்தவம் உரோமையை வந்தடைந்ததென்றும் நம்பப்படுகின்றது. சீமோன் பேதுரு உரோமைக்கு எப்போது எப்படி வந்தார் என்பது தெளிவில்லா விட்டாலும், புனித பவுலடிகள், உரோமன் அதிகாரிகளினால் சிறையிலிடப்பட்டு உரோமைக்குக்கொண்டு வரப்பட்டார். கிறீஸ்தவர்கள் முதலில் சித்திரவதைக்கு உள்ளானார்கள்.

(தொடரும்..)

## காவலன் கலசம்

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

மாணவர்கள் அறிவில் மட்டும் வளர்ந்தால் போதாது அவர்கள் உணர்வு ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், ஆன்மீக, ஆரோக்கிய நிலைகளிலும் முன்னேறுவதற்கு அவர்களின் ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் நண்பர்களுடனான தொடர்புகள் ஊடாகவும் கல்வி பாடவிதானங்கள், விளையாட்டுக்கள் மூலமாகவும் அவர்கள் தமது உணர்வுச் சமநிலை-யினை அடைவார்கள்.

எதிர்காலக் குடிமக்களை உருவாக்குவதும் வடிவமைப்பதும் ஆசிரியர்களின் புனித பணியாகும். ஆசிரியர்கள் தம் பொறுப்பிலுள்ள மாணவர்களைக் கருத்திற்கொண்டு தற்போது அனுஷ்டிக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்துமாறு அழைப்பு விடுக்கின்றோம். அதேவேளை, எமது எதிர்காலக் குடிமக்களையும், தலைவர்களையும் உருவாக்கும் ஆசிரியர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருப்பதால், அவர்களின் நீண்டகால சம்பள முரண்பாடுகளைச் சீர்செய்யுமாறு மாணவர்களின் நலனுக்காக அரசாங்கத்திடம் ஒருவேண்டுகோளையும் விடுக்கின்றோம்.

வீட்டு வன்முறை, குழந்தைகளின் பாலியல் மற்றும் பிற துஷ்பிரயோகங்கள், குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைகளின் ஆபாசப் படங்கள் போன்ற குற்ற நடவடிக்கைகள் மட்டில் ஊழல், தாமதமாகக் கையா-ளுதல், அரசியல் தலையீடு, நீதியைச் செயற்படுத்தும் அதிகாரிகளின் தவறான தீர்ப்புகள் என்பன சுகாதாரம், சமூகம், கல்வி, பொருளாதாரம், அரசியலில் நன்நெறிப் பிறழ்வுகளை ஏற்படுத்தியுள்ளன. இதைச் சீர்செய்வது மதத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கான ஓர் அழைப்பாகும்.

கொவிட் - 19 பெரும் தொற்று ஏற்படுத்திய பொருளாதாரப் பின்னடைவால் முழு நாடும் உதவியற்ற நிலையில் உள்ளது. அதிக விகிதமான வேலையின்மை தவிர்க்க முடியாத வறுமையை ஏற்படுத்தி நிற்கின்றது.

எனவே சுயநலத் திட்டங்கள் தவிர்க்கப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டு, அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும். ஏனைய நாடுகளில் காணப்படும் சிறந்த நடைமுறைகளை நாம் கடைப்பிடிக்கும் அதே வேளையில், தலைமைத்துவமானது அரசியல் கருத்துக்களையோ, சுய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவோ அல்லது, நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்படவேண்டும்.

இறைவன் நம் நேசத்துக்குரிய தாய்நாட்டையும் அதன் அனைத்துக் குடிமக்களையும் ஆசீர்வதிப்பாராக எனப் பேரவையின் தலைவர், செயலர் ஒப்பமிட்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

## கரித்தாஸ் இலங்கை -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கரித்தாஸ் இலங்கை - செடெக்கானது இன, மத பேதமின்றி நாட்டின் பலபகுதிகளிலும் பரந்து வாழும் விசேட தேவையுடையோர், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வோர் என பல்வேறுபட்ட சமூகத்தினருடன் கடந்த 53 ஆண்டுகளாக தனது சமூக, பொருளாதார, தனி மனித அபிவிருத்தி தொடர்பான பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

கொழும்பை மையமாகக் கொண்டிருக்கும் கரித்தாஸ் இலங்கை வலையமைப்பு, இலங்கையின் 12 மறை மாவட்டங்களிலுமுள்ள 13 மறைமாவட்ட நிலையங்கள் ஊடாக எமது சமூகத்துக்கு ஆற்றும் சேவை மூலம் வறிய மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து வருகின்றது.

பல வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சிறப்பான ஒரு தலைமைத்துவத்தை வழங்கி, பலருக்கும் முன்னுதாரணமாகத் திகழும் கரித்தாஸ் இலங்கை - செடெக் தேசிய நிலையத்தின் தேசிய இயக்குநர் அருட்தந்தை மஹேந்திர குணதிலக அவர்களுக்கு இறையாசி கிடைக்கவேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.


## ASSISTANT WANTED

Rev.Fr.S.J.Emmanuel of Bishop's House,
Jaffna needs a personal assistant,
priest, religious, layman or laywoman,
to assist him in his office few hours a day.
Anyone with sufficient knowledge
of - English & Tamil,
ability in working with computer,
may apply to me by letter or email
sjemmanuel@t-online.de
After an interview and selection,
remuneration can be agreed.

**Rev.Fr.S.J.Emmanuel**


## தியோகு நகர் கிராமத்து மக்களுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த தியோகு நகர் எனும் கிராம மக்களுக்குக் காணி வழங்கும் நடவடிக்கையில், முதற்தொகுதியாக 50 உரிமங்கள், நன்கொடை உறுதிகளாக வழங்கப்பட்டன.

அவற்றை யாழ் மறைமாவட்ட ஆயரின் பெயரால், மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு P.J. ஜெபரட்ணம் அடிகள் மக்களுக்குக் கையளித்தார். இந்நிகழ்வு சுகாதார வழிகாட்டலுடன் தியோகு நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சிறப்புற ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

# கிறிஸ்துவோடு உறவில் நிலைத்திருப்பதால் கிடைக்கும் அனுபவம்

ஆண்டவருடைய தோற்றமாற்றம் விழாவை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செய்தி ஒன்றை, வெளியிட்டுள்ளார்."கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் கிடைக்கும் அனுபவத்தை அடைய நாம் அழைக்கப்படுகிறோம் என்பதை, ஆண்டவருடைய தோற்றமாற்றம் விழா நமக்கு நினைவுபடுத்துகின்றது. அதன் வழியாக நாம் அவரது ஒளியால் ஒளியூட்டப்பட்டு, சிறிதளவு அன்பு மற்றும், நம்பிக்கையைத் தாங்கும் நற்செய்தியின் சிறிய விளக்குகள் போன்று நாமும் எல்லா இடங்களுக்கும் அவ்வொளியைத் தாங்கிச்செல்வோம், மற்றும், அதனை ஒளிரச்செய்வோம்" என்ற சொற்கள், திருத்தந்தையின் செய்தியில் இடம்பெற்றிருந்தன.

புனித பூமியில், தபோர் மலையில் அமைந்துள்ள மூன்று பெருங்கோவில்கள் அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்விலிருந்து, ஆண்டவருடைய தோற்றமாற்றம் விழா கொண்டாடப்படும் வழக்கம் இருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

9ம் நூற்றாண்டில், இவ்விழா பல்வேறு வடிவங்களில் சிறப்பிக்கப்பட்டு வந்தது. ஆயினும் 1456ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் திகதி, பெல்கிரேடு போரில் கிறிஸ்தவர்கள், துருக்கியரைத் தோற்கடித்ததன் நினைவாகத் திருத்தந்தை 3ம் கலிஸ்துஸ் அவர்கள், மேற்கத்திய திருஅவையில், இவ்விழா, உலகம் முழுவதும் ஆகஸ்ட் 6ம் திகதி சிறப்பிக்கப்படுமாறு பணித்தார்


## 26ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 03 1934



இறப்பு 24 08 1995

### அமரர் பாக்கியம் ஞானப்பிரகாசம்

இருபத்தைந்தாண்டுகள்
கடந்து போனதம்மா...
மறந்து போகவே முடியவில்லை - உம்
புன்னகை ததும்பும்
பூமுகம்
எம் மனக்கண்ணில் என்றும்
அழியா நினைவுகளாய்...

மறந்து போகவே முடியவில்லை - உம்
வாழ்வின் ஒரு வரியைக்கூட
அம்மா கடவுளில்
இளைப்பாறுங்கள்...

மகன்: ஞா . விமலதாசன் (கனடா)
மகள்: ஜஸ்ரினா ஜோர்ஜ் (ஜேர்மனி)
மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்

ஊர்காவற்றுறை



## விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 . 04 . 1985



விண்ணில் 19 . 08 . 2016

அமரர்

### ஹெஜிஸ் செல்வநாதன் மெறில் கிளின்ரன்

*"விண்ணக அரசின் அழைப்பு வந்தது அகமகிழ்ந்தேன் அவரின் திருப்பாதம் அடைந்தேன்".*

பகலவனாய் உதித்துப் பார்போற்ற வாழ்ந்து
அன்பை அள்ளித்தந்து 31 ஆண்டுகள் எம்மோடு
வாழ்வாங்கு வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
5 ஆண்டுகள் ஓடிப்போனாலும் கண்ணீர் ஓயா
ஈரவிழிகளுடன் உமது முகம் அருகில் இருப்பது போல்
உணர்ந்து உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

235, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு
021 222 5327

Ad-59

இவரின் பிரிவால் துயருறும்
பாசமிகு அம்மா, தம்பி, மைத்துனி,
உற்றார், உறவினர், நண்பர்கள்



## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 16 04 1955



இறைவன் அடியில் 12 08 2016

அமரர்

### கிஸ்டீன் அன்ஜலா தருமசீலன்

**"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் – நீ எனக்கு உரியவர்" (எசா.13:1)**

ஆயிரம் சொந்தங்கள்
அமைந்திட இருந்தாலும் ........
அன்னையே உன்னைப் போன்று
அன்பு செய்ய யாரும் இல்லை
இவ்வுலகில் ...........
ஆண்டுகள் 5 ஆனது நீர் நம்மை விட்டுச் சென்று
நீர் வான் வீட்டில் இன்புற்றிருக்க எம்
செபங்களில் இறைவனை வேண்டுகின்றோம்

Ad-60

பிரிவால் வாடும்
கணவன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்கள்

நீர்கொழும்பு



## 27ம் வருட நிறைவஞ்சலி

மண்ணில் 12 . 08 . 1918



விண்ணில் 09 . 02 . 1994

AD 58

அமரர்

### திருமதி ஜேக்கப் அன்னம்மா

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்!"

வாழ்வளிக்கும் வள்ளலாகிய இறைவா!
மண்ணில் இவரது 103 வது பிறந்த தினத்தை நினைவு
கூரும் இந்நாளில் எமது அன்பின் அன்னை இறை
சன்னிதானத்தில் இறைவனுடன் மகிழ எம்மைப்
பராமரித்து வழிநடத்திய அன்னையே உம் ஆன்மா
அமைதியுடன் இறைவனுடன் சங்கமிக்கவும் உம் பிறந்த
நாளில் இறைவனை வேண்டுகின்றோம்.

**இவரின் ஆன்மா நித்தியத்திற்கும் இறைவனோடு ஒன்றித்திருக்க மன்றாடுகின்றோம்**

யாழ்ப்பாணம்.

அன்புப் பிள்ளைகள்
குடும்ப உறவுகள்

# ஆயருடனான இவ்வாரச் சந்திப்புக்கள்



யாழ். மாவட்டத்திற்கு புதிய இராணுவக் கட்டளைத்தளபதியாக பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு அவர்கள் தம் பணிப்பொறுப்பை ஏற்க முன்னதாக யாழ் ஆயர் அவர்களைச் சந்தித்து ஆசியைப் பெற்றுக்கொண்டார்.

இச்சந்திப்பு யாழ் .ஆயர் இல்லத்தில் 27ஆம் திகதி செவ்வாய் கிழமை அன்று இடம்பெற்றது.



யாழ் இந்தியத் துணைத்தூதுவர் திரு. பாலச்சந்திரன் அவர்கள் இலங்கையிலிருந்து மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைச் சந்தித்து ஆசிபெற்றதுடன் தமது சேவைக் காலத்தில் ஆயர் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறியிருந் தார் . இச்சந்திப்பு யாழ். ஆயர் இல்லத்தில் கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இடம்பெற்றது.



வடமாகாணத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதம செயலாளர் திரு. சமன் பந்துலசேன அவர்கள் தம் பணிப் பொறுப்பின் முன்னதாக யாழ். ஆயரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

இச்சந்திப்பு யாழ் ஆயர் இல்லத்தில் 30ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று இடம்பெற்றது

# முதியோர் துஷ்பிரயோகம் மட்டில் விழிப்புணர்வு வேண்டும்

## முதியோர் தின ஞாயிறு மறையுரையில் குரு முதல்வர்



ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்தின் இறுதி ஞாயிறு தினத்தை தாத்தா பாட்டி, முதியோர் தினமாக அனுசரிக்குமாறு எமது திருத்தந்தை அறிவித்ததன் பிரகாரம் கடந்த 25-07-2021 ஞாயிறு தினம் முதியோர் தினமாக திரு அவை அனுசரித்தது. எமது யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திலும் பல பங்குகள் இந் நிகழ்வை சிறப்பித்திருந்தன.

சில்லாலை புனித யாகப்பர் ஆலய திருநாள் திருப்பலியின்போது முதியோர் தினம் பற்றி மறையுரையாற்றிய யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J. ஜெபரட்ணம் அடிகளார், இன்று எம் மத்தியில் வாழுகின்ற பல முதியோர்கள் பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிறார்கள் என்றும் சிறுவர் துஷ்பிரயோகம் மட்டில் நாம் கவனம் செலுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதுபோல முதியோர் துஷ்பிரயோகம் மட்டிலும் விழிப் புணர்வு தேவை என்று வலியுறுத்தினார்.

இன்று பல முதியோர்கள் யாருடைய கவனிப்புமின்றி தனிமையில் துன்புறுகிறார்கள். பெற்ற பிள்ளைகளால் கூட துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய சொத்துக்கள் அவர்களின் விருப்பமில்லாமல் பிள்ளைகளாலும் ஏனையோராலும் சூறையாடப்படுகின்றன. பல முதியவர்கள் இளையோரால் கேலி செய்யப்பட்டு அவமானப்படுத் தப்படுகிறார்கள். நோயினால் அவதியுறும் பல முதியவர்கள் தகுந்த சிகிச்சையின்றி வேதனைப்படுகிறார்கள். பல முதியவர்கள் தாங்கள் வாழ விரும்புகின்ற இடங்களில் வாழமுடியாமல் விருப்பமில்லாத இடங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்டுகின்றார்கள் என்று குறிப்பிட்ட குருமுதல்வர் முதியவர் மட்டிலான இக் குறைபாடுகள் நீங்க விழிப் புணர்வு அவசியம் என்று குறிப்பிட்டார்.

யாருமே இவ்வுலகில் பயனற்றவர்கள் அல்ல என்றும், நாம் பயனற்றவர்கள் என்று எண்ணும் ஒவ்வொரு முதியவரூடாகவும் இறைவனின் திட்டம் ஏதோ ஒரு வகையில் நிறைவேறுகின்றது என்றும் கூறிய அவர், புனித சுவக்கீன், புனித அன்னம்மாள் ஆகிய முதியோர்களிடமிருந்தே இயேசுவின் தாயாகிய கன்னி மரியாவை இறைவன் எமக்குத் தந்தார் என்பதை மேற்கோள் காட்டினார்.

# எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் கண்காட்சியும் விற்பனையும்



எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் எமது சமூக மேம்பாட்டின் உயர்வுக்கு மிக முக்கிய தேடலாகும். இதனை முன்னெடுப்பதில் கியூடெக் கரித்தாஸ் நிறுவன ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக் குழுவினரால் ஆனைக்கேட்டையில் 31.07.2021 நடைபெற்ற கண்காட்சியும் விற்பனையும் மிகச் சிறப்பான சமூக விழிப்பூட்டலை ஏற்படுத்தியது.

# கொழும்புத்துறைப்பங்கில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



கொழும்புத்துத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் கொழும்புத்துறைப் பங்கிலுள்ள பிள்ளைகளு க்கான உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு 27.07.2021 கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் 40 மாண வர்களுக்கு இவ் அருட்சாதனம் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி J. நீக்கிலஸ் அடிகளின் ஒழுங்கு படுத்தலில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இவ் அருட்சாதனக் கொண்டாட்டம் சிறப்பாக இடம்பெற்றது.

# நவாலி இளையோரினால் இரத்ததானம்



நவாலி சென் பீற்றேஸ் இளையோர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் சென் பீற்றேஸ் ஆலய முன்றலில் 25.07.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இரத்ததான முகாம் நடைபெற்றது. 1995 ஆம் ஆண்டு நவாலி புனித பேதுறுவானவர் ஆலயத்தில் நடைந்தேறிய விமானக் குண்டு வீச்சில் பலியான உறவுகளின் நினைவாக குறித்த நிகழ்வை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி. வினோதினி, வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் திரு. றஜீவன், சண்டிலிப்பாய் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரினோராச், பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உறுப்பினர்கள், மற்றும் நாவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். அன்றைய இரத்ததான முகாமில் 23 குருதிக் கொடையாளர்கள் இணைந்து குருதித்தானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பரந்தன் பங்கில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள பரந்தன் புனித அந்தோனியார் ஆலயம் முரசுமோட்டை புனித சகாய மாத ஆலயம் ஆகியவற்றின் 41 பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு 26.07.2021 கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் வழங்கப் பட்டது

கடந்த ஆறுமாத காலத்திற்கு முன்பாக ஒழுங்கு செய்யப்பட்டு, கொரோனா அச்சுறு த்தல் காரணமாகவும் பயணத்தடை காரணமாகவும் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்நிகழ்வு தற்போதைய பயணத்தடைத் தளர்வின்போது வழிபாடுகளுக்கான அனுமதி வழங்க பட்டதன் அடிப்படையில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து பங்குத் தந்தை அருட்திரு R.H. சகாயநாயகம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றுள்ளது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.